HINDUISM REFUTED.

ஹிந்துமத கண்டனம்.

BY THE
Rev. HENRY RICE,
MADRAS:

FIRST EDITION, 5,000 COPIES.

MADRAS:
THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

One Anna. 1891. க அணா.

HINDUISM REFUTED.

ஹிந்துமத கண்டனம்.

BY THE

Rev. HENRY RICE,

MADRAS:

FIRST EDITION, 5,000 COPIES.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

1891.

Th

to th

by th

They

in a

may,

PREFACE.

THE following articles originally contributed in English to the "Messenger of Truth" and translated into Tamil by the Rev. J. Lazarus, B. A., are now re-published. They deal with current phases of Hindu belief and doctrine in a popular and, it is hoped, effective manner. They may, also, be useful as short bazaar addresses.

CONTENTS.

பக்கம்.

I. Folly of Idolatry.—விக்கிரகபூசை வீண்பிரயாசை... 5

II. Transmigration.—மறுஜென்மம் 8

III. Caste: Its Evils.—சாதிபேதமும் அதின் கெடுதியும்... 12

IV. Maya.—மாயை....... 15

V. Pantheism.—சர்வம் பிரம்மம் என்னும் சகத்துவாதம்.. 18

VI. The common saying of the Hindus that the "Almighty is not to be blamed" is false and incredible.—ஹிந்துக்கள் கடவுளைக் குற்றப்படுத்தலாகாதென்பது தவறென்றுகாட்டியது 20

VII. Hinduism and Christianity compared.—ஹிந்துமதமும் கிறிஸ்துமதமும். 23

VIII. Hinduism and the Bhagavata Puranam.—ஹிந்துமதமும் பாகவதமும்......... 27

IX. The immoral tendency of Hinduism.—ஹிந்துமதம் துன்மார்க்கத்தை விளைவித்தல்...................... 30

X. Christ and Krishna.—கிறிஸ்துவும் கிருஷ்ணனும்..... 33

XI. Vedic science absurd and incredible.—வேதசாஸ்திரம் புத்திக்கும் பக்திக்கும் விரோதமானது 38

XII. Why is India not Progressive?—இந்தியா விர்த்தியடையாதிருக்கிறதேன்? 41

HINDUISM REFUTED.

ஹிந்துமத கண்டனம்.

I. FOLLY OF IDOLATRY.

விக்கிரகபூசை வீண்பிரயாசை.

ஹிந்துக்களில் அனேகம்பேர் விக்கிரகவணக்கம் சரியல்லவென்று ஒப்புக்கொண்டாலும் சாமானிய சனங்களுக்கு அது அவசியமென்று சாக்குசொல்லி அதை நடத்திவருகிறார்கள். கல்வியறிவில்லாத பேதைகள் விக்கிரகவணக்கத்தினாலே நற்புத்தியடைகிறார்கள் என்பது அவர்கள் துணிபு. இது எதுபோலென்றால், வெகுகாலமாய் விஷத்தை உண்டு தங்கள் ஆத்மக்ஷேமத்தைக் கெடுத்துக்கொண்ட பேதைகள் தங்களுக்குப் புத்தித் தீட்சணியம் உண்டாகும்வரைக்கும் அவ்விஷத்தையே உண்டுவரவேண்டும் என்பதுபோலிருக்கிறது விக்கிரகவணக்கம் மனுஷனுடைய புத்திக்கும் சௌரவத்திற்கும் விரோதமாய் இருக்கிறதென்பதைச் சில நியாயங்களைக்கொண்டு ருசுப்படுத்துவோம்.

(1.) அரூபியாயுள்ளவஸ்துவை வணங்குவது கஷ்டமானமையால் அறிவில்லாத சனங்கள் சுரூபங்களை வணங்குவது அவசியம் என்கிறார்கள். இருக்கட்டும். மனப்பூசை கஷ்டம் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் விக்கிரகபூசை அதிலும் எளிதோவென்று பார்ப்போம்! சனங்கள் சகஜமாய்ச் சூரிய சந்திரரையும், நீர், நிலம், நெருப்பு முதலியவற்றையும் நமஸ்கரித்து அவற்றிற்குக் காணிக்கை செலுத்தவேண்டும் என்பதற்கு பல ஆஞ்ஞாபனைகள் உண்டு. நல்லது, இது நம்முடைய இயற்கை அறிவுக்கு எப்படித் தோன்றுகின்றது. அசரீரியமாயிருந்தாலும் சர்வஞ்ஞமும் சர்வவியாபகமும் பொருந்திய சாட்சாத கடவுள் நாம் செய்யும் ஜெபத்தைக் கேட்பார் என்கிறதோ, உணர்ச்சியறிவில்லாத சூரிய சந்திராதிகள் அதைக் கேட்கும் என்கிறதோ, எது நியாயத்திற்குச் சரியாயிருக்கிறது?

மனுஷனுக்குக் கீழ்ப்பட்ட தாவரவஸ்துக்கள் முதலானவை அவன் குறைகளை நீக்கும் என்கிற துணிபோ, அவற்றைப் படைத்தருளிய பரபொருளே அக்குறைகளை நீக்குவார் என்கிற துணிபோ, எது நம்முடைய புத்திக்கு எளிதாகத் தோன்றுகின்றது? அற்பமாயிருக்கப்பட்ட இந்தப் பொருள்களுக்கு ஆவியாயிருக்கப்பட்ட பரமவஸ்துவின் லட்சணங்களை ஆவாகனஞ் செய்வித்துக்கொள்வது எளிதோ, அந்தப் பரமவஸ்துவை நேரே நமது மனத்தால் பூசித்துக்கொள்வது எளிதோ? இப்பேர்ப்பட்ட நேர்விரோதங்களை நம்முடைய மனம் ஒருக்காலும் உட்கொள்ளாது. உட்கொண்டாலோ, இரண்டிலொன்று சம்பவிக்கும். ஒன்று அது கடவுளைவிட்டுக் கல்லையும் செம்பையும் கட்டிக்கொள்ளும், அல்லது கல்லையும் செம்பையும்விட்டுக் கடவுளைப் பற்றிக்கொள்ளும்.

(2.) விக்கிரகபூசை மனுஷரை உயர்த்தாமல் அவர்களைத் தாழ்த்திக்கொண்டே வருகிறது. ஹிந்துக்கள் சொல்லுகிறபடியே விக்கிரகபூசையானது மனப்பூசைக்கு முதற்படியும், மனுஷரைக் கடவுளிடம் நடத்தும் கருவியுமாயிருந்தால், ஹிந்துக்கள் இரண்டொரு தலைமுறைக்குள் ஆவியாயிருக்கிற கடவுளை ஆவியினாலும் உண்மையினாலும் தொழத்தொடங்கியிருக்கவேண்டுமே. அப்படிக்கில்லாமல் அவர்கள் வரவரச் சீர்கெட்டுச் சிதைவுற்று ஆண்டபொருளை மறந்து அற்பவஸ்துக்களைக் கையெடுத்துக் கும்பிட்டு அருங்கேட்டில் அமிழ்ந்தியிருத்தற்குக் காரணம் என்ன? அவர்கள் ஒரு தேவனை வணங்குவதை விட்டபின்பு, முதலாவது ஆறு எழு தேவதைகளையும் இப்போது முப்பதுமுக்கோடி தேவர்களையும் உண்டுபண்ணியிருக்கிறார்கள். அவர்களைப்போலவே அவர்கள் தேவர்களும் சீர்கெட்டிருக்கிறார்கள். கடவுள் படைத்த சூரியனையும் சந்திரனையும் மாத்திரமல்ல தங்கள் சொந்தக் கைகளால் சமைக்கப்பட்டவைகளையும் சேவித்துவருகிறார்கள். நீண்டு சிவந்த நாக்கையுடைய காளியையும், வயிறுபெருத்த பிள்ளையாரையும், கொடுங்காமியாகிய கிருஷ்ணனையும், அவலட்சணமான லிங்கத்தையும் பூசித்துவருகிறார்கள்.

(3.) விக்கிரகபூசை தெய்வவணக்கத்துக்கு நேர்விரோதமாயிருக்கிறது. ஒருமுறை சோரம்போன பெண் மீளவும் பதிவிரதையாவது கூடாமைபோலவே, விக்கிரகத்தொழும்பர் கடவுளை கண்டடைவதும் கூடாமையாயிருக்கிறது. விக்கிரகபூசையிலிருந்து மனப்பூசைக்குத் திரும்புவது ஆற்றை மலைமுகமாய் ஓடச்செய்வதுபோலும். காரணம் எப்படியோ

அப்படியே காரியமும். மனுஷர் தாங்கள் வணங்கும் தேவதைகளுக்கு ஒப்பாகிறார்கள். அவர்கள் அத்தேவதைகளின் நடை உடை பாவனைகளை இயல்பாய்ப் பின்பற்றுவார்கள். தாயைப் போலப் பிள்ளையும் நூலைப்போலச் சேலையும் அல்லவா? விக்கிரகவணக்கம் மூடர்களுக்குமாத்திரம் உரியதென்று ஹிந்து ஞானிகள் சொல்லுகிறதுண்டே. அப்படியானால் மூடர்களை ஞானிகளாக்கத்தக்க உபாயத்தை அல்லவோ ஹிந்து விவேகிகள் உண்டுபண்ணவேண்டும்? மரத்தை அதின் கனியால் அறியலாம். அதுபோலவே விக்கிரகபூசையின் தன்மையையும் அதின் பலனால் அறியலாம்.

(4.) விக்கிரகத்தையல்ல, அதின்மூலமாய்ப் பரபொருளை வணங்குகிறோம் என்கிறார்கள். இந்த நியாயமும் உதவாது. ஏனென்றால், (i) பரபொருளை நேரே தேடினாலும் விக்கிரகத்தின் மூலமாய்த் தேடினாலும் இரண்டுக்கும் ஒரேஅளவான விஸ்வாசம் வேண்டியதாயிருக்கிறது; (ii) கண்ணுக்குத் தோன்றும் பிரதிமைகள் கண்ணுக்குத் தோன்றாத கடவுளின் திருக்கல்லியாணகுணங்களை விளக்குவதெவ்வாறு; (iii) யாதாமோர் பொருளைக் கடவுள் என்று பாவிப்பதினால் அது கடவுளே யாமாயின், தன்னை ராஜனென்று பாவித்துக்கொள்பவனும் ராஜனாய்விடவேண்டுமே.

(5.) விக்கிரகங்கள் இல்லாமல் அறிவீனர்களும் கடவுளை தியானிப்பது அசாத்தியமல்ல. அவருடைய ரூபத்தையல்ல, அவருடைய குணங்களைத்தான் நாம் தியானிக்கவேண்டியது. பிரசைகள் தாங்கள் காணாத எசமானை மரியாதை செய்கிறதும், தாங்கள் எப்பொழுதும் பார்த்தறியாத பரோபகாரியை நேசிக்கிறதும், தங்கள் தேசத்தில் ஒருநாளும் பவனிவராத ராணியின் சட்டங்களுக்கமைந்திருப்பதும் சகஜமல்லவா? அப்படியே அவர்கள் அரூபியாயிருக்கிற கடவுளையும் அடைந்து வழிபடுவதும் கூடிய காரியமே.

(6.) விக்கிரகவணக்கம் தெய்வதுரோகமாயிருக்கிறது. பரமாத்மாவாகிய கடவுளுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு விக்கிரகமென்கிலும் இல்லை. ஒவ்வொருவிக்கிரகமும் வேறேயொரு வஸ்துவைமாத்திரம் குறிக்கிறதாயிருக்கின்றது. ராஜ்யத்திற்கு அதிபதியாகிய ராணியாரிடம் விசுவாசம் வையாமல் இதர அரசனை அடுத்திருக்கும் குடிகள் ராஜதுரோகிகளா யிருப்பது போலவே, அண்டசராசரங்களுக்கெல்லாம் சர்வாதிபதியாகிய கடவுளிடத்தில் விஸ்வாசம் வையாமல் விக்கிரகங்களின் வழி

யாய் வேறே பல வஸ்துக்களிடத்தில் தங்கள் மனதைச் செலுத்தும் மானிடர் தெய்வதுரோகிகளாகவேயிருக்கிறார்கள்.

சதுர்வேதங்களில்லே விக்கிரகபூசை விதித்திருக்கிறபடியால் அவை கடவுள் அருளிய வேதமும் மானிடர்களுக்கு உத்தம வழிகாட்டியும் ஆகா. கிறிஸ்துமத வேதத்திலோ ஆதி முதல் அந்தமட்டும் விககிரகவணக்கம் விலக்கப்பட்டிருக்கிறது. இதுகாரணத்தினால் அது மனிதர்யாவரையும் நியாய நெறியில் நடத்தும் நல்ல துணைக்கருவியாயிருக்கிறதென்று நன்கு விளங்குகின்றது.

II. TRANSMIGRATION.

மறுஜென்மம்.

பிறவி அல்லது மறுஜென்மம் உண்டு என்பது இந்துக்களுடைய முதன்மையான உபதேசங்களில் ஒன்று. இந்துக்கள் தற்காலத்திலும் இந்தக் கொள்கையைச் சாதாரணமாய் அநுசரித்து வருகிறார்கள். ஒழியாப் பிறவிக்குட்படுவது ஒப்பிலா துன்பமும், அபபிறவியினின்று விடுபடுவது ஒப்பிலா இன்பமுமாம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்று திருவள்ளுவர் உரைத்திருக்கிறார். சாஸ்திரங்களிலிருந்து இரண்டொரு உதாரணங்கள் கூறுவோம். "அறிவில்லாதவன்; புத்தி வேறுபாடுள்ளவன்; சித்த சுத்தியற்றவன் மோட்சமடையான்; அவன் மீளவும் உலகத்திற்கே போகவேண்டும்." "மனுஷன் தானியத்தைப்போலிருக்கிறான், அவன் செத்து அழிந்தாலும், திரும்பவும் அதைப்போல் முளைத்தெழும்புவான்" "ஆத்மாவானது சாகும். பிரம்மத்தைக் கிரகிக்குமாயின் உலகசிக்குகளிலிருந்து விடுவிக்கப்படும்; இல்லையாயின் மறுபடியும் அது உடலெடுத்து இவ்வுலகத்தில் உதிக்கும்." மறுஜென்மம் என்றால் உடலெடுக்கும் தன்மையே; முத்தியடையுமட்டும் பிறப்பு இறப்பிற்கு உட்பட்டுவருவதே. மானிடஜென்மங்களுக்கெல்லாம் ஆத்மா உண்டென்று சொன்னாலும் அவ்வாத்மாக்கள் பிறக்குமுன் இருந்தனவாம். அவை அப்பிறவிக்குமுன் செய்த நன்மை தீமைகளுக்குத்தக்க பலாபலன்களை அனுபவித்திருந்தனவாம். இந்துக்கள் இக்கொள்

கையை அனுசரித்துவருவதால், தேசசட்டம் ஒன்றுதவிர மற்றெதற்கும் அஞ்சாமல், தமக்கிஷ்டமான துஷ்டத்தனங்களை யாதொரு விசாரமின்றி நடப்பித்துவருகிறார்கள். ஏனென்று வினவினால், "எங்களுக்கென்ன சக்தியுண்டு, தெய்வத்தாலன்றி ஓரணுவும் அசையாது: எங்கள்விஷயத்தில் ஆதியில் விதிக்கப்பட்டது யாதோ, அதுவே தவறின்றி நிறைவேறும். எங்களுக்குப் பிரீதியானதை நாங்கள் செய்தாலும் செய்யாவிட்டாலும் யாதொரு பயனில்லை" என்று கூறுவார்கள்.

மனுநீதி 12. 9ல் உடலாற்செய்த பாவத்துக்காக ஒருவன் மரம் லோகம் முதலானவையாகவும், வாயாற்செய்த பாவத்துக்காக புள், விலங்காகவும், மனத்தாற்செய்த பாவத்துக்காக ஈனஜாதியானாகவும் பிறப்பான் என்றும் கூறியிருக்கிறது.

இந்த உபதேசம் சுத்த தவறு; இதினால் விளையும் தீமை கொஞ்சநஞ்சமல்ல; புத்திமான்கள் இதை அங்கீகரிக்கலாகாது. ஏனென்றால்,

I. முதலாவது இவ்வுபதேசத்தினால் உலகத்திலுள்ள பல வகைப்பட்ட சராசரங்கள் தாறுமாறாக்கப்பட்டு அவ்வற்றிற்குரிய தாரதம்மியம் இல்லாமற்போகின்றது.

விலங்கு, விருட்சம், பூண்டு, பாறை முதலானவற்றிலும் புத்தியுள்ள மானிட ஆன்மாக்கள் சஞ்சரித்திருக்கின்றன என்னும் இந்தப் போதகம் நம்முடைய உலகானுபவத்திற்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. ஐரோப்பிய சாஸ்திரிகள் மாத்திரமேயல்லாமல் இந்துசாஸ்திரிகளும் பிரபஞ்சத்திலுள்ள யாவற்றையும் சரம், அசரம், அல்லது உயிருள்ளவை உயிரற்றவை என்று இருபிரிவாய் பிரித்திருக்கிறார்கள். மேலும் உயிருள்ளவைகளுக்குத் தத்தம் இனத்தைமாத்திரம் பலுகச்செய்யும் சக்தியுண்டு. உதாரணமாக, மாங்கொட்டையிலிருந்து மாஞ்செடியே உற்பத்தியாகின்றது, வாழை அல்ல. அதுபோலவே குதிரைக்கு நாய்க்குட்டியும், காக்கைக்குக் கோழிக்குஞ்சும் உண்டாகிறதில்லை. இதுமாத்திரமன்றி, அந்தந்தச் சாதிக்குரிய லட்சணங்கள்தான் அந்தந்தச் சாதியிலே தோன்றக் காண்கிறோம். யானையின் விவேகமும் சிங்கத்தின் வீரியமும் இனம் மாறி விளங்குகிறதில்லை. அவ்வவ்வினத்தின் குணம் குறிகள் யாதொரு குற்றங்குறையின்றி அவ்வவ்வினத்து செந்துக்களில் எக்காலத்தும் தோன்றிவருகின்றன. மனுஷரிடத்திலிருந்து மனுஷர்மாத்திரம் உற்பத்தியாகிறார்கள். ஆதலால் மறுஜென்மம் என்னும் கோட்பாடு பிரபஞ்சத்தின் அழகையும் அலங்காரத்தையும் குலைத்துப்போடுகிறதாயிருக்கிறது.

II. ஆன்மாக்கள் உடல்விட்டு உடல்பாய்கிறதென்று நம்முடைய ஞாபகம் கூறுகிறதில்லை.

ஞாபகம் என்பது முக்கியமான ஓர் அந்தக்கரணம். தனக்குப் புலப்படுகிற ஒவ்வொரு விஷயத்தையும் அது சேர்த்துப் பத்திரப்படுத்திவைக்கிறது. சிலவிஷயங்கள் நாளாவட்டத்தில் மறந்துபோனவைகளாகவிருந்தாலும் யாதாயினும் ஓர் அற்பகாரணத்தினால் அவை நமது ஞாபகத்துக்கு வரக் காண்கிறோம். ஏழுவருஷத்துக்கொருமுறை சரீரம் மாறி புதுப்பிக்கப்பட்டாலும், ஆத்மாவானது பாலியத்தில் தான் சேர்த்துவைத்த ஒவ்வொரு சங்கதியையும் மறவாதிருக்கிறது. ஆதலால், நான் இவ்வுலகத்தில் இப்பிறப்பிற்குமுன் வாழ்ந்ததுண்டானால், அல்லது நான் பலமுறை பிறந்திறந்தது வாஸ்தவமானால், இத்தனை சிறப்பான ஞாபகசக்தியையுடைய என் ஆத்மா அதை மறக்கமாட்டாதே. கிளிப்பிள்ளைமுதலாய் ஒரு கூட்டில் கற்றுக்கொண்டதை மற்றொரு கூட்டிற்போனாலும் மறக்கிறதில்லையே. அப்படியிருக்க, எந்த ஆத்மாவானாலும் தான் பிறந்ததற்குமுன்பு இவ்வுலகத்திலே இன்னஉடலெடுத்துச் சஞ்சரித்திருந்தேனென்று சொல்ல சக்தியில்லாமலிருப்பதெப்படி? நம்முடைய அறிவெல்லாம் நம்முடைய தற்கால ஜென்மத்தைக் குறித்ததாய்மாத்திரமிருக்கிறது.

III. மறுஜென்மம் என்பது அநியாயத்தை நடப்பிக்கிற உபதேசம்.

முன்னொரு பிறப்பில் ஆத்மா சஞ்சரித்திருந்ததென்றால் அது அப்பொழுது செய்த நல்வினை தீவினைகளை முற்றிலும் மறக்கச்செய்த காரணம் ஒன்று இருக்கவேண்டுமே. இப்பிறப்பில் இருக்கிற ஓர் ஆத்மாவைப் பார்த்து, முற்பிறப்பிலே நீ இன்னின்ன குணகுணங்கள் உடையவனாயிருந்தாய் என்று நாம் சொன்னால், அதை அவன் தன்னுடைய ஆத்மத்தின் குணகுணங்களாக எண்ணாமல் பிறிதோர் ஆத்மத்தின் குணகுணங்களாக எண்ணிக்கொள்வான். இந்தப் பிறப்பில் நீ தண்டிக்கப்படுகிறாய் என்றால், அந்தத் தண்டனையின் காரணம் அவனுக்கு விளங்குகிறதில்லை. இது அநியாயம் அல்லவா?

IV. இவ்வுபதேசத்தைக் கற்பித்தவர்களின் கருத்து இதினால் நிறைவேறுகிறதில்லை.

ஆத்மாவானது உடல்விட்டுடல் புகுவதால் எத்தனையோ காலஞ்சென்றபின்பு தன் துற்குணத்தையெல்லாம் தீர்த்துக்கொள்ளுகிறதென்று இந்துமதஸ்தர்கள் யாவரும் ஒப்புக்கொள்

ளுகிறார்கள். தீயோர் தீவினையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நல்லோர் நல்வினையில் விர்த்தியடைந்து கடைசியிலே முக்தி பெறுகிறார்கள். இது விஷயத்துக்கும் ஞாபகம் அவசியமாயிருக்கிறது. ஒருவனுக்கு ஞாபகம் இல்லாவிட்டால் தான் செய்த கருமங்களுக்காக இப்பிறப்பிலே தண்டிக்கப்படுகிறான் என்று அவன் அறிந்துகொள்வதெப்படி? இதனால் பாவத்துக்கும் அதின் தண்டனைக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம் அற்றுப்போகிறது; ஆத்மாவுக்கும் விர்த்தியடைய ஏதுவில்லை. சர்க்கார் குற்றவாளிகளைச் சிறையிலிருத்தித் தங்கள் துர்ஸகவாசத்திலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கு நற்புத்தி சொல்லி, வித்தைகள் தொழில்கள் கற்பித்துவருகிறார்கள். கடவுளோ, இவ்வுபதேசத்தின் பிரகாரம் துராத்மாக்களைத் தாங்கள் விட்டுவந்த உலகத்துக்கே அனுப்பி, முன்னிருந்த தோழர்களிடம் சேர்ப்பித்து, யாதொரு புத்திமதி சொல்லாமல் விட்டுவிடுகிறார். ஒருவனைத் தன் பழைய கூட்டாளிகள் நடுவில் கொண்டுபோய்விடுகிறதினாலே அவன் யோக்கியனாவானா? நாய், நரி, பன்றியின் உடல் எடுத்தா ஓர் துராத்மா பரிசுத்தமாகிறது? தன் மகளைத் தாசிகளோடு ஆடவிட்டா அவளைக் சற்புநிலைதவறாமல் காக்கச் செய்கிறது? மனுஷருக்கிருக்கும் புத்தி கடவுளுக்கில்லாமற் போயிற்றோ?

ஆதலால் அன்பர்களே, இவ்வுபதேசம் நியாயத்துக்கும், நன்மைக்கும், மானிடர் ஈடேற்றத்துக்கும் முற்றிலும் விரோதமாயிருக்கிறதால், இதை விட்டுவிடுவதே விவேகம். நாம் பிறப்பதும் ஒருமுறை; மரிப்பதும் ஒரே முறை. நம்முடைய செய்கைகளுக்காக நாம் கடவுளுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நாம் விதைக்கிறதெதுவோ அதையே நாம் அறுப்போம். தேவன் நல்லோரை இரட்சித்துத் தீயோரைத் தண்டிப்பார். நல்லோருக்கு மோட்சமும் தீயோருக்கு நரகமும் உண்டு. நாம் நம்முடைய பாவத்தைப் போக்கிக்கொள்ளக் கூடாமையால், சற்குருவாகிய இயேசுகிறிஸ்து தமது ஒரே அவதாரத்தாலும் தமது ஒரே பிராயச்சித்த பலியினாலும் அதை விமோசனம்பண்ணி நமக்கு மன்னிப்பின் புண்ணியத்தைச் சம்பாதித்திருக்கிறார். அவர் உங்களுக்குப் புதிதான உள்ளத்தையும் புதிதான சுபாவத்தையும் அருளிச் செய்வார். நீங்கள் பாவத்தை வெறுத்துப் பரிசுத்தமாய் ஜீவிக்கத்தக்க சக்தியையும் உங்களுக்குக் கடாட்சிப்பார். இதுவே மெய்யான மறுஜென்மம், இதுவே மெய்யான முக்தி.

III. CASTE: ITS EVILS.

சாதிபேதமும் அதின் கேடுதியும்.

ஒரு வகுப்பாரை உயர்த்தி மற்றொரு வகுப்பாரைத் தாழ்த்துவதே சாதிபேதத்தின் இயல்பு. பிராமணர்கள் பலவிதமாய் உயர்வடைந்திருக்கிறார்கள். "தெய்வாதீனம் சகத்ஸர்வம், மந்திராதீனந்து தெய்வதம், தன்மந்திரம் பிராமணாதீனம், பிராமணோ மமதேவதா" என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. அவர்கள் பூதேவர் என்னப்படுகிறார்கள். அவர்கள் தேகம் பரிசுத்தமாய்ப் பாவிக்கப்படுகின்றது; பலவிதமான நன்மைகளும் மிராசுகளும் அவர்களுக்கே உரியன. அவர்கள் பட்சமாகவே அநேக சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மனுதர்ம சாஸ்திரமானது பிராமணமேன்மையை ஸ்தாபிக்கும்பொருட்டே இயற்றப்பட்டதாகத் தோன்றுகின்றது. மற்றச்சாதியார் பலவிதமாய்த் தாழ்வடைந்திருக்கிறார்கள்; கைத்தொழிலே அவர்கள் சீவனோபாயமாயிருக்கின்றது; வேதம் ஓதல் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது; எந்தக் குலத்தாராயினும் தம் குலத்துக்கு உயர்ந்தகுலத்தில் பிரவேசித்தல் கூடாமையாயிருக்கிறது. இதுநிற்க:—

i. சாதிபேதமானது எல்லா தர்மகுணத்திற்கும் நேர்விரோதமாயிருக்கிறது. உலகத்திலே சிலர் தனவான்களும், சிலர் தரித்திரர்களும், சிலர் ஆண்டவர்களும், சிலர் அடிமைகளும், சிலர் கற்றவர்களும், சிலர் கல்லாதவர்களுமாயிருப்பதால், சனங்களுக்குள்ளே இந்தக் காரணங்களினாலே உயர்வு தாழ்வுகள் உண்டாகிறது இயல்புதான். இந்தப் பேதங்கள் நிலையான பேதங்களல்ல. தரித்திரர் தனவான்களாகிறதும், கல்லாதவர்கள் கற்றவர்களாகிறதும், அடிமைகள் ஆண்டவர்களாகிறதும் நாம் சகஜமாய்ப் பார்த்துவருகிறோம். சாதிக் கட்டுப்பாட்டினால் உண்டாகிற உயர்வுதாழ்வுகளோ ஒருக்காலும் மாறாதவைகளாயிருக்கின்றன. குணம், கல்வி, நடத்தை எவ்வாறாயினும் ஈனனாய்ப் பிறந்தவன் எப்பொழுதும் ஈனனும், உயர்ந்தவனாய்ப் பிறந்தவன் எப்பொழுதும் உயர்ந்தவனுமாயிருக்கவேண்டும். பிறப்பினாலே ஒருவன் ஆண்டவனாகிறான்; பிறப்பினாலே ஒருவன் அடிமையாகிறான். சூத்திரனாய்ப் பிறந்தவன் எத்தனைதான் புத்தி தீட்சணமும் முயற்சியுமுள்ளவனாயிருந்

தாலும் அவன் ஒருக்காலும் பிராமணனாகான். அன்பர்களே, இதென்ன அநியாயம்?

ii. சாதிபேதமானது குலத்துடன் குலத்தையும் ஆளுடன் ஆளையும் வேறுபடுத்தி, ஒருவரை ஒருவர் பகைக்கச் செய்கின்றது. அது அன்பென்னும் ஆற்றைப் பாயவொட்டாமல் அதின் ஊற்றை அடைக்கும் பெரும் பாறையாயிருக்கின்றது. தத்தம் சாதிக்குரிய ஆசாரத்தினாலும், நடை உடை பாவனைகளினாலும் பிரத்தியேகப்படுத்தப்பட்டிருக்கிறவர்கள் அந்நியரை உபசரித்தலும் வியாதிக்காரருக்கு உதவிசெய்தலும் கூடாமையாயிருக்கிறது. புலி என்ன பசித்தாலும் பசும்புல்லைத் தின்னாதது போல மேற்குலத்திற் பிறந்தவர் கீழ்க்குலத்தவரிடத்தில் ஒருக்காலும் உணவெடுத்து உண்ணலாகாது. உண்டாலோ சாதிப் பிரஷ்டத்துக்காளாவார்கள். ஒவ்வொருவனும் தன்தன் குல கௌரவத்தையே நோக்கவேண்டியதால், சுயப்பிரீதி, சுசாதி மித்திரத்துவம், அன்பில்லாமை, கலகப்பிரியம் முதலான குணங்கள் தோன்றி தேசத்தின் நாசத்துக்கேதுவாய்க் கிரியை செய்கின்றன. பலபேர் ஓரிடத்திற் கூடியிருந்து சந்தோஷமாய்ச் சம்பாஷித்து விருந்துண்பதினாலோ குடும்ப சினேகமும், அயலார் ஐக்கியமும், நட்புவிர்த்தியும், நாட்டுவிர்த்தியும் பெரும்பாலும் விளைந்துவருவதை நாம் அடிக்கடி காண்கிறோம். சாதிபேதமானது இப்பேர்ப்பட்ட கூட்டங்களுக்குத் தடையாயிருப்பதினால் ஹிந்துக்கள் மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகள் அற்றவர்களாயிருக்கிறார்கள்.

iii. சாதிபேதமானது பிரபஞ்ச விதிகளோடு போராடும் ஓர் கொடிய சத்துருவாயிருக்கிறது. வர்ணபேதவிதியின் பிரகாரம் ஒருவன் ஒரு தொழிலைநடத்தும் சக்தி அவன் திறமை அல்ல, அவன் பிறப்பே. தச்சன் மகன் தச்சுவேலை செய்யவேண்டும்; இடையன்மகன் இடையன்வேலையை செய்யவேண்டும். அவனவன் தனக்கு இஷ்டமானதும் தன் திராணிக்கேற்றதுமான தொழிலையல்ல, தன் தந்தை செய்த தொழிலையே செய்ய வேண்டும். இந்த சாதிக்கட்டுப்பாட்டினால் உண்டாகும் தீமை கொஞ்சமல்ல. ஒருவன் மனதாரச் செய்கிற வேலைக்கும் மனமற்றுச் செய்கிற வேலைக்கும் வெகு வித்தியாசம் உண்டு. பலாத்காரமாய்ச் செய்யும் ஒரு தொழிலிலே சிறப்பும் சாமர்த்தியமும் தோன்றமாட்டாது. செய்கிறவன் அதை ஊக்கத்துடன் செய்யவுமாட்டான். கல்விப்பிரியனான ஓர் தச்சன் பிள்ளை கட்டாயத்தினாற் செய்யும் மேசை நாற்காலி முதலியன எப்படியிருக்கும்? அன்பிருந்தால் மலையும் அசையும் என்பதுபோல அன்பு

டன் இயற்றும் வேலையிலே மாத்திரம் நாளுக்குநாள் விர்த்தியுண்டாகும். இந்தச் சாமானிய பிரமாணத்துக்கு சாதிபேதமானது நேர்விரோதமாயிருக்கிறது. இத்தேசத்துக் கைத்தொழில்களிலே 2000வருஷ காலமாய் யாதொரு விர்த்தியும் இல்லை. ஆதியிலிருந்து திட்பநுட்பமும், புத்தி சக்தியும், சூன்யமாய்ப் பறந்துவிட்டது. ஹிந்துக்கள் தங்கள் முன்னோர் மகத்துவத்தையும், தங்கள் மன்னவர் மாட்சிமையையும் எடுத்துரைப்பதில் யாதொரு பயனும் இல்லை. அவர்களை வேறுபடுத்திக் கெடுத்துவிட்ட சாதிபேதம் என்னும் சர்ப்பத்தை நாளதுவரையும் பால்வார்த்து வளர்த்துவருகிறார்களே. பூர்வ ஆரியரின் ஐக்கியத்தை அழித்து, அவர்கள் புத்தியைக் கெடுத்து, அவர்கள் பொருளைப் பறக்கடித்து, அவர்கள் கைத்தொழிலை நிர்விருத்தியாக்கி, அவர்கள் சுவாதீனத்தை அபகரித்து, அவர்களைத் தங்கள் பேராசைக் குருக்களுக்கு அடிமைகளாக்கிவிட்ட இந்தச் சாதிபேதப் பேயை இன்னும் தழுவிவருகிறார்கள். தங்கள் அழிவைப் பார்த்துப் புலம்பினாலும் அவ்வழிவின் காரணத்தை ஆவலுடன் கட்டி அணைத்துக்கொள்கிறார்கள்.

iv. சாதிபேதமானது விக்கிரகாராதனையை விர்த்திபண்ணுகின்றது. பிராமணர்கள்மாத்திரம் வேதத்தை வாசிக்கலாம் என்னும் விதியினால், மற்றச் சாதியாருக்கு மதத்தைப்பற்றிய அறிவு இல்லாமற்போயிற்று. மதவிஷயங்கள் மாத்திரமல்ல, வித்தைவிஷயங்களும் அவர்களுக்கு விலக்கப்பட்டன. அவர்களுக்கு மதோபதேசம் செய்வார் யாரும் இல்லை. தாங்களும் சுயேச்சையாய் மதஆராய்ச்சிசெய்து ஞானமார்க்கத்தைக் கண்டடைவதும் கூடாமற்போயிற்று. இந்தப்பிரகாரம் உள்ளக்கண் மூடவே, ஊனக்கண் விக்கிரகத்தை நோக்கலாயிற்று. விக்கிரகங்கள் அதிகரித்து விபவங்கள் விளங்கவே, பிராமணனுக்குப் பிரயோசனமும், சூத்திரனுக்குச் சந்தோஷமும் உண்டாயிற்று; நாடெங்கும் விக்கிரகாராதனை பிரபல்லியமாய், ஒரு தீமை இன்னொரு தீமைக்குத் தாய் ஆயிற்று. இத்தேசத்தாரை அழித்துவரும் இந்தச் சாதிபேதம் இவ்வுலகின்கண் வேறெங்கும் இல்லை. இந்தத் தீமை இத்தேசத்தினின்றும் நிர்மூலமாக ஹிந்துக்கள் யாவரும் முயற்சிசெய்யவேண்டும்.

IV. MAYA.

மாயை.

நாம் வசிக்கும் இப்பிரபஞ்சமும், அதிலுள்ள சராசரமனைத்தும், அவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பஞ்சபூதங்கள் யாவும் பொய் என்பதே மாயை. அவை உள்ளனபோல் தோற்றினாலும், உள்ளனவேயல்ல. பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் மாயை என்னும் மயக்கத்தால் மனமானது இல்லாததை உள்ளதாகப் பாவித்துக்கொள்கின்றது. இதற்குதாரணமாக ஒரு சுலோகம் எடுத்துரைப்போம்: "அறியாமை என்னும் மயக்கமானது பிரம்மாவின் முட்டையிலிருந்து பிரபஞ்சத்தை உற்பவிக்கச்செய்கின்றது." இதனால் பிரபஞ்சமனைத்தும் பெரும் பொய் என்றும் அதை உண்டுபண்ணிய கடவுள் பொய்யரென்றும் விளங்குகின்றது! இது ஹிந்துமதோபதேசம். புத்திமான்கள் நம்பத்தக்க என்ன யுக்தி நிறைந்த போதனை!! ஆயினும் தற்சமயம் இந்தக் கோட்பாட்டை மேற்கொண்டவர் பெரும்பாலார். இந்தப் பொய் உபதேசத்துக்கு முக்கியமான மூன்று ஆக்ஷேபனைகள் உண்டு.

(i.) இந்த மாயை என்னும் உபதேசம் சர்வேஸ்வரனை மானபங்கம் பண்ணுகிறதாயிருக்கிறது. நம்முடைய சிந்தையைக் கவர்ந்து நமக்குள் சந்தோஷத்தையாவது சஞ்சலத்தையாவது உண்டுபண்ணும் எண்ணுக்கடங்காத பொருள்களும் காட்சிகளும் செய்கைகளுமாகிய யாவும் அவர் தமது சொந்த லீலார்த்தமாய் உண்டாக்கும் வெறும் தோற்றங்களேதவிர உண்மையாய் உள்ளனவல்ல. அத்தோற்றங்களனைத்தும் அவர் சக்தியினால் பிறப்பவை; அவரே அவற்றைத் தமது திருவிளையாட்டாக நடத்திவருகின்றார். அவற்றின் குணாகுணங்கள் எவ்வாறாயினும், அவை பக்திவிஷயமும் தர்மவிஷயமுமானவைகளானாலும், காமக்குரோத மதமாச்சரிய செய்கைகளானாலும், கொலை கொடுமை நிறைந்தவைகளானாலும் அவற்றிற்கெல்லாம் அவரே காரணரும் கர்த்தாவுமாம். மனிதர் வாக்கினின்றும் புறப்படும் அமிர்தமான வார்த்தைகள், ஆச்சரியமான பிரசங்கங்கள் அவலட்சணமான பேச்சுகள், தூஷணிப்பான மொழிகள் ஆகிய அனைத்தும் தெய்வத்தின் லீலாவினோதங்களாம். மகத்வம்பொருந்திய கடவுளை இப்படியும் மானபங்கம்பண்ணலாமா?

(ii.) இந்த உபதேசம் மனுஷ நினைப்புக்கு மாறுபாடாயிருப்பதால் அதை நம்பக்கூடாது. ஒருவன் இதைக்குறித்து, "என் ஸ்மரணையே மாயையினால் வஞ்சிக்கப்பட்டிருக்க, அம்மாயக்கிரியையை நான் அறிந்துகொள்வதெவ்வாறு? என் அறிவு முதலாய் மாயை ஆயிற்றே. என்னைச் சூழ்ந்திருக்கும் சகல வஸ்துக்களும் மாயத்தோற்றங்களல்லவா? அவை தோற்றங்கள் என்றால், அதை நான் எந்த அறிவைக்கொண்டு கிரகித்துக்கொள்வேன்? மாயையைப்பற்றிய அறிவும் மாயை ஆயிற்றே," என்று முறையிட ஏதுவாயிருக்கும். பயித்தியக்காரனை நம்புவார் யாருமில்லை. பித்தமானது அவன் சிரசுக்கேறி, அவன் புத்தியைக் கலக்கி, பொருட்பேதமும் குணபேதமும் பகுத்தறியாவண்ணம் அவனை விலங்கினும் இழிஞனாக்கிவிடுகின்றது. அப்படிப்பட்டவன், "நான் முழுப் பித்தன்" என்று தன்னைக் குறித்தே சாட்சிபகர்வானா? அதுபோலவே மாயாபாசத்தில் கட்டுண்டு கிடக்கிறவர்களான வேதாந்திகள் "சர்வமும் பொய்" எனக் கூறுவதே தங்கள் கொள்கையின் ஆபாசத்தை எடுத்துரைப்பதாயிருக்கிறது. ஒருநாளும் வஞ்சிக்கப்படாமல் மனுஷனுக்குள் மாறாமல் நிலைநின்று பிரபஞ்சத்தின் யதாஸ்திதியைத் தெளிவுடன் கிரகித்து, தன்னைச் சூழ்ந்திருக்கும் மயக்கத்தை ஊடறுத்து "இன்னது இத்தன்மையது" என்று திண்ணமாய்க் கூறும் மனுஷ சக்தி ஒன்றுண்டு. இந்தப் பெருஞ்சுடர் முன் மாயை என்னும் பனியானது மாயமாய்ப் பறந்துவிடுகின்றது. தெளிந்த புத்தியுள்ளவன் மாயையை மறுக்கத் துணிதலே அதன் ஆபாசத்திற்கத்தாட்சி.

(iii.) சர்வமும் மாயை என்னும் உபதேசம் சத்தியமானால், அது நிவிர்த்தியாகிறதெப்படி? நம்முடைய மனோவாக்குக் கிரியை ஆகிய திரிகரணமும் மாயையிலே சிக்குண்டிருக்க நாம் பரம வஸ்துவை அறிவதெப்படி? மேலும், இவ்வித மாய்ச் சிக்குண்டு கிடப்பவர் கடுமுயற்சிசெய்து அம்மாயையினின்றும் தப்பும்படி நெடுநாளாய் சாஸ்திரங்களை வாசித்து வரக்கூடுமோ? வேதாந்திகள் இந்தக் கேள்விகளுக்குத் திருப்திகரமான விடை கூறுகிறதில்லை. ஆயினும், வேதாந்திகள் பிரயாசையுடன் வேதாந்த நூல்களை வாசிக்கவேண்டுமென்றும், இனிவரும் நற்பயனைக்கருதி அவர்கள் உஜ்ஜீவிக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப்போதிக்கும் மாயை என்னும் கோட்பாடானது பிரபஞ்சத்தோற்றத்தில் எவ்வாறாயினும் மானிடர் விஷயத்தில் மெய்யாகாதென்பது திண்ணம்.

(iv.) மாயை என்னும் உபதேசமானது இந்துமத காரணகாரிய சித்தாந்தத்துக்கு ஒவ்வாததாயிருக்கிறது. இந்தச் சித்தாந்தத்தின்படிக்குக் காரணத்தைப்போலவே காரியமும் இருக்கவேண்டும். காரியமானது ஞானப்பிரகாரமாயிருந்தால் காரணமும் அப்படியேயிருக்கவேண்டும் காரியமானது சடத்துக்குரியதாயிருந்தால் காரணமும் அப்படியேயிருக்கவேண்டும். ஞானப்பொருளினின்று சடப்பொருளுண்டாவதில்லை தெய்வசத்து என்று சொல்லப்பட்ட பிரம்மாவுக்குச் சடமுண்டென்பது முற்றும் ஞாயவிரோதம். பிரம்மாவென்று சொல்லப்பட்ட தெய்வசத்தானது நிஷ்களங்கமானது; சடம் என்பதோ களங்கமுள்ளது. பிரம்மாவென்று சொல்லப்பட்டது அறிவுள்ளது; சடமோ அறிவற்றது. பிரம்மா மாறக்கூடாதது. சடமோ மாறக்கூடியது. அப்படிச்கிருக்க பிரம்மாவிலிருந்து சடமுண்டாகக் கூடியதெப்படி? ஞானப்பொருளினின்று சடப்பொருள் உண்டாகிற சித்தாந்தமானது இந்துக்களின் உணர்ச்சிக்கேற்காத அருவருப்பாயிருக்கிறது.

(v.) இந்த உபதேசமானது மனக்கடினப்பட்ட பாவிகள் அநேகருக்குத் தூண்டுதலும் மனத்திருப்தியும் யுண்டுபண்ணுவதாயிருக்கிறது. சமர்த்தனை ஒரு தேசப்பிரமாணிகனின் சீவியத்தை அது அவனுடைய ஜெயமுள்ள தந்திரங்களின் வரலாறாகச் செய்வித்திருக்கிறது. கொடுங்கோலனின் சரித்திரத்தை அவனுடைய கொடூரச் செய்கைகளும் துராகிர்தங்களும் நிறையக் கொண்டிருக்கிறது. சிற்றின்பப் பிரியனையோ அவனுடைய காமாதுரச் செய்கைகளினுல் அவனை அகால மரணத்துக்குள்ளாக்கிவிடுகிறது. குடியன், சண்டாளன், பாதகன், துஷ்டன், புரட்டன், துணிகரமான திருடன் முதலானவர்கள் இந்த உபதேசத்தால் சன்மார்க்கத் தவறினுல் உண்டாகிற பல கெடுதிகளுக்குரிய பயத்திலிருந்து நீங்கி, தேவனுக்கும் மனிதனுக்கும், புண்ணியத்துக்கும் பாவத்துக்கும், சுத்தத்துக்கும் அசுத்தத்துக்கும், மோட்சத்துக்கும் நரகத்துக்கும் யாதொரு வித்தியாசமில்லையென்று எண்ணிக்கொள்ளுகிறவர்களுக்குப் பூரண சந்துஷ்டியுண்டு என்கிற மோசமான நம்பிக்கைக்குள்ளாகிறார்கள்.

V. PANTHEISM.

சர்வம் பிரம்மம் என்னும் சகத்துவாதம்.

"இந்தப் பிரபஞ்சம் எல்லாம் பிரம்மமே. அவரினின்றும் அது உற்பத்தியாகி, அவரிடத்திலேயே அடங்கிப்போகிறது; அவரிடத்திலே அது சுவாசிக்கிறது." "சிலந்திப்பூச்சியானது தான் நூற்ற நூலைத் திரும்பத் தன்னிடம் இழுத்துக்கொள்வது போலும், செடிகள் பூமியிலே முளைப்பதுபோலும், சீவப்பிராணிகளில் மயிர் முளைப்பதுபோலும், அழிக்கப்படாத பிரகிருதியிலிருந்து பிரபஞ்சமானது புறப்படுகின்றது." மேற்சொல்லிய உபதேசங்களினாலே பூமி, சலம், சிலந்திப்பூச்சி, பூனை, அறிவுள்ள மானிடர் முதலிய சர்வமும் பிரம்மம் என்று விளங்குகின்றது. இப்போது யாம் அடியில் வரும் நியாயங்களைக் கொண்டு இவ்வுபதேசத்தின் ஆபாஸத்தை எடுத்துரைக்க முயல்வோம்.

(i) இவ்வுபதேசத்தை அநுசரித்தல் நாஸ்திக சம்பந்தமாய் முடியும். உயர்ந்ததும் இழிந்ததுமான சகல சராசரத்தையும் தெய்வாம்ஸமாக்கும் இத்தொழிலால் மகத்துவம்பொருந்திய தெய்வத்தன்மையானது அவற்றின் ஈனத்தன்மை அடைவதுமல்லாமல், சர்வ மதங்கட்கும் சிறந்த ஆதாரமாகிய சிருஷ்டிகன் சிருஷ்டி என்னும் பேதம் அற்றுப்போகின்றது. இதனால் மானிடர் துணிவுடன், "நமக்குப் பிரத்தியேகமான தெய்வம் ஒன்றுமில்லை, அவனுடைய ஆக்கினைப்படி நாம் நடக்கவேண்டிய நிமித்தமுமில்லை" என்றுரைக்க இடமுண்டாகிறது.

(ii) உலகத்திலே சகஜமாய் வழங்கிவரும் பேதாபேதங்களும் தாரதம்மியங்களும் இவ்வுபதேசத்தால் ஒழிந்துவிட ஏதுவுண்டாகிறது. இனி, அரசன், பிரசைகள்; தந்தை, புத்திரன்; ஞானிகள், மூடர் என்னும் பேதங்கள் ஏன்? சர்வமும் பிரம்மமன்றோ? இதுவுமன்றி தச்சனுக்கும் அவன் உபயோகிக்கும் ஆயுதங்களுக்கும், குயவனுக்கும் அவனது தண்டசக்கரத்துக்கும், வண்ணானுக்கும் அவன் வெளுக்கும் ஆடைக்கும் யாதொரு பேதம் இல்லை. கருமானும் அவன் உலைக்களமும் ஒன்றே; குதிரையும் அதை ஏறுகிறவனும் ஒன்றே; எசமானும் அவனுடைய நாயும் ஒன்றே; பானைபிடித்தவளும் அவள் பானையும் ஒன்றே. பிரபஞ்சமானது இவ்விதக் கோட்பாட்டைப் போதிக்கிறதா?

(iii) இந்த விபரீதக் கொள்கை மானிட உணர்ச்சிக்குச் சுத்த மாறுபாடாயிருக்கிறது. நாம் புத்திபூர்வமாய்ச் செய்யும் ஒவ்வொரு செய்கையும், நாம் எண்ணும் ஒவ்வொரு எண்ணமும் நாம் வேறு, மற்றவையெல்லாம் வேறு என்று நமக்கு உணர்த்துவதேயன்றி, நாமும் பிறரும் ஒன்றென்று ஒருக்காலும் உணர்த்துகின்றதேயில்லை. நமக்குப் புறம்பான பிரபஞ்சம் ஒன்றுண்டு என்றும், நாம் அதற்கு எவ்விதத்திலும் உடன்பட்டவர்கள் அல்லவென்றும் நமக்குப் பிரதிதினமும் பிரதிநேரமும் விசதமாயிருக்கிறது. நாம் சித்தரகிதமான யந்திரங்களன்று, நம்முடைய சுயேச்சையாய் சீவித்து அசைவாடும் அறிவுள்ள பிராணிகளாயிருக்கிறோமென்பதே நம்முடைய நித்யானுபவமாயிருக்கிறது. நம்மைப்போலவே மற்றவர்களும் தத்தம் மனோவாக்குக் கிரியைகளிலே சுவாதீன சித்தர்களாய் நடந்துவருகிறதையும் நாம் கண்டுவருகின்றோம்.

சர்வம் பிரம்மம் என்னும் கோட்பாடானது நமக்கும் கல், புல் முதலிய சடப்பதார்த்தங்கட்கும் பேதமேயில்லையென்று நம்பும்படி நம்மை ஏவுகிறதாயிருக்கிறது. இந்தத் தாட்டாந்தத்தையோவென்றால் சர்வ தேசங்களிலும் சர்வ காலங்களிலும் சர்வ விஷயங்களிலும் சர்வ மனுஷரின் நித்தியாநுபவமானது மறுத்துவிடுகின்றது. நாம் எல்லாரும் சுவாதீன சித்தர்களாயிருக்கிறோமென்பது சர்வ சம்மதக் கொள்கையென்றறிக. மனுஷர் மனுஷரே, தெய்வமல்ல; யான், நீ என்னும் பேதம், என் பொருள், உன் பொருளென்னும் உரிமைபாராட்டல்; சுவாதீனம் என்னும் லட்சணம், உயிரையும் உடலையும் உலகம் பாதுகாத்தல் ஆகிய இத்தியாதி சம்மட்டிகளால் இவ்வுபதேசமாகிய போலிமலை தகர்க்கப்பட்டுப் போகின்றது.

(iv) கடைசியாய் இவ்வுபதேசம் நீதிச்குரிய சகல விதிவிலக்குகளையும் அழித்துவிடுகின்றது. மனிதனானவன் பாவபுண்ணியங்களைப் பகுத்தறியும் லட்சணமுடையவனாக அமைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு இது உடன்பிறந்த இயல்பாயிருக்கிறது. தான் செய்பவைகளைமாத்திரமன்றி, பிறர் செய்பவைகளையும் அவன் இந்த நீதிக்கோலால் அளந்து, இது பாவம், இது புண்ணியம் என்று இயல்பாய்த் தெரிவிக்கிறான். தயை தாட்சணியமுடையோர், ஈவிரக்கமுடையோர், தம்மை வருத்திப் பிறரை ஆதரிப்போர், தர்மநெறி வழுவாது நடப்போர் ஆகிய புண்ணியவான்களை உலகத்தில் எங்கும் கையெடுத்து ஏற்றிப் புகழ்வார்கள். பெற்றோர்க்கடங்கிய புத்திரனும், அன்புள்ள புத்திரியும், தேர்ந்த நண்பனும் யாவத்திராளும் ஆசீர்வதிக்

கப்படுவார்கள். ஆனால் திருடனும், பொய்யனும், தூர்த்தனும், கொலைபாதகனும், விசுவாசகாதகனும் எல்லாராலும் சபிக்கப்படுவார்கள். "கிரிமினல் ஸிவில் லா" என்றால் அர்த்தம் என்ன? நன்மைதீமைக்குரிய பேதம் எள்ளளவும் பிறழாதபடிக்கு இயற்றப்பட்ட சட்டங்களே. வேதங்களும், வேதாந்தமும், சூத்திரங்களும், பகவத்கீதமும் தமக்கிஷ்டமானபடி "சர்வம் பிரம்மம்" என்று சாதிக்கட்டும்; ஆனால் பரமவஸ்துவை மானபங்கம்பண்ணி, மனுஷருக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கெடுத்து, மனுஷானுபோக சாட்சியத்தைப் பொய்யாக்கி, தர்மநெறியை அழித்துவிடும் இவ்வுபதேசமானது சீவகாருண்ய கடவுளாகிய நித்திய நிமலன் அருளியதன்றென்று திண்ணமாகின்றது.

VI. THE COMMON SAYING OF THE HINDUS THAT THE "ALMIGHTY IS NOT TO BE BLAMED" IS FALSE AND INCREDIBLE.

ஹிந்துக்கள் கடவுளைக் குற்றப்படுத்தலாகாதென்பது தவறென்று காட்டியது.

ஹிந்துக்களின் தேவர்களுடைய துர்க்கிருத்தியங்களை எடுத்துரைத்தால் அவர்கள் அதற்கு மறுமொழியாக, பரமவஸ்துவின்மேல் குற்றஞ்சொல்லக்கூடாது; துர்க்கிருத்தியங்கள் அவருடைய திருவிளையாட்டாயிருக்கிறதேயன்றி, மற்றப்படி அவற்றில் பாவமில்லை என்று கூறுவதுண்டு. இதற்கெதிரிடையாகக் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் சொல்லும் நியாயங்களாவன:—

(1.) கடவுள் தமக்குச் சித்தமான யாவற்றையும் செய்யக்கூடிய சர்வவல்லவராயினும் தாம் பகைப்பதைமாத்திரம் செய்யக் கூடாதவராயிருக்கிறார். அவர் பூரண பரிசுத்தம்பொருந்தியவரானமையால் அவர் பாவத்தைப் பகைக்கிறார். அவர் ஒருவருடைய பலாத்காரத்துக்குட்படாத சுத்த சுவாதீனமுள்ளவரானதால் அவர் பாவத்தை ஒருக்காலும் செய்யமாட்டார்; பிறர் அதைச் செய்யவும் சற்றேனும் ஒப்புக்கொள்ளார் என்றும் விளங்குகின்றது. நல்ல மரத்தில் பொல்லாத கனி உண்டாகிறதும்,

நன்னீர் ஊற்றில் உவர்நீர் உற்பத்தியாகிறதும் இயல்புக்கு விரோதமாயிருக்கிறதுபோலவே, கடவுள் பாவஞ்செய்கிறதும் அவருடைய மாறா இயல்புக்கு விரோதமாயிருக்கும்.

(2.) கடவுளானவர் மற்றவர்கள் செய்யலாகாதென்று விலக்கியிருப்பவைகளைத் தாமே செய்வது சுத்த விபரீதமாயிருக்கும். அவர் எல்லாரிலும் நல்லவரும் நேர்மையுள்ளவருமாயிருக்கிறபடியால், அவரே எல்லாருக்கும் நீதியிலும் பரிசுத்தத்திலும் முன்மாதிரியாயிருக்கவேண்டும். ஆதலால் அவர் தாமே பொய்பேசுகிறவரும் வஞ்சிக்கிறவருமாயிருந்தால், பொய்யரும் வஞ்சகரும் அவருக்கு அஞ்சி நடப்பார்களா? அவர் தாமே நீதியை நடப்பியாதவரானால், நீதிக்காக அவரிடத்தில் அபயமிடுவார் யார்? கடவுள் வழுவாத நீதிவந்தரானதால்தான் நல்லோர் அவரை நேசித்து நடக்கிறார்கள். அவர் பாவமுள்ளவரானால் எல்லாரும் பாவமுள்ளவர்களாவார்கள். பகவத்கீதையிலே கிருஷ்ணன் கூறுகிறதாவது: நான் சத்கிரியைகள் செய்யாவிட்டால், ஜகத்தோரும் தங்கள் கடன்களை நிறைவேற்றார்கள்.

(3.) கடவுள் பாவத்தைச் செய்யவேண்டிய காரணம் யாதோ? அவருடைய பாக்கியம் பூரணப்படாமையினாலோ? அவர் அநாதிநித்தியமான ஆனந்தசொரூபியாயிருக்கிறாரே! அவருடைய பாக்கியத்துக்கு யாதொரு குறைவுமில்லையே. பின்னை அவர் பாவம் செய்வானேன்? மனிதருக்குப் பாவஞ்செய்யும்விதத்தைக் கற்பிக்கவோ? அப்படி ஒருவரும் சொல்லார்களே. ஆதலால் கடவுள்தாமே பாவஞ்செய்யவாவது மற்றவர்கள் அதைச் செய்விக்கவாவது யாதொரு காரணமும் இல்லையென்று பிரத்தியட்சமாகின்றது.

(4.) தேவர்கள் செய்ததாகச் சொல்லியிருக்கும் அக்கிரமங்கள் மனுஷருக்கு விரோதமாயிராமல் தங்களைப்போன்ற தேவர்களுக்கு விரோதமாகவே செய்யப்பட்டன. ஆகவே, தேவர்கள் தாமே தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் சண்டைச்சச்சரவு செய்துகொண்டிருந்தால் அவர்களைப் பரிசுத்தம்பொருந்திய தேவர்கள் என்றெண்ணலாமா?

மேலும் அவர்கள் இயற்றிய பாவத்தின் பலன் நற்பலன் என்று ஹிந்துக்கள் சொல்லுகிறார்கள். உதாரணமாக, கிருஷ்ணன் இடைப்பெண்களோடு நடப்பித்த விபசாரத்தினாலே அப்பெண்கள் முத்திபெற்றார்கள் என்றும், பரசுராமன் செம்படவன் பெண்ணைப் புணர்ந்துபெற்ற புத்திரன் ஜகப்பிரக்கியாதி அடைந்தான் என்றும் சொல்லியிருக்கிறது. விபசாரன் விபசாரிகளிடத்தில் அடைந்த சுகத்துக்குக் கைம்மாறாக மோட்ச

மளித்ததும், பேர்போன மகனைப்பெறும்படி தன் மனைவியை விட்டுப் பரஸ்திரீயின் முகம்பார்த்தும் தெய்வச்செயல்கள் என்பது எப்பேர்ப்பட்ட உபதேசங்கள்? அன்றியும், அப்பாவக்கிருத்தியங்களின் பயன் துற்பயனாகவே விளங்கிற்று. பிரமதேவன் தான்செய்த குற்றத்திற்காக மானமிழந்து கோவிலற்றவனாய்ப் போனான்; சிவன் தன் லிங்கத்தை இழந்தான்; விஷ்ணு சபிக்கப்பட்டான்; இராமன் தன் மனைவிமக்களை இழந்தான்; கிருஷ்ணன் காட்டிலே மிருகத்தைப்போல் கொல்லுண்டான்; அவன் பிணத்தை ஓநாய்கள் விழுங்கிவிட்டனவென்றும், சமுத்திரம் வந்தடித்துக்கொண்டு போய்விட்டதென்றும் சொல்லியிருக்கிறது.

(5.) தேவர்கள் இன்னின்னவிதமாய் நடந்துகொண்டார்கள் என்று சாஸ்திரங்கள் கூறுவது நிசமாயின், அவர்கள் இயற்றியது நிர்தோஷமானதென்று அந்தச் சாஸ்திரங்கள் கூறுவதும் நிசமாயிருக்கவேண்டும். ஆனால் நாம் முதற்காரியத்தை நம்பினால், இரண்டாம் காரியத்தை நம்புகிறது கூடாமையாயிருக்கிறது. திருடன் திருட்டிலே பாவமில்லையென்றும், விபசாரக்காரர் விபசாரத்திலே தோஷமில்லையென்றும் சொன்னால் அதை யார் நம்புவார்கள்? அதுபோலவே தேவர்கள் பாவங்களைச் செய்துவிட்டு அப்பாவச்செயல்கள் சரியென்று சாதித்தல் சுத்த பிசகாயிருக்கிறது. தேவர்கள் என்னப்பட்டவர்கள் கடவுளின் மெய்யான அவதாரங்களாயிருந்தால், அவர்கள் அப்படிப்பட்ட பாவச்செயல்களை ஒருக்காலும் செய்திருக்கமாட்டார்கள். சாஸ்திரங்கள் கடவுள் அருளிய திருமறையானால் அப்பாவச்செயல்களைப் பரிசுத்த செயல்களாக அவை ஒரு க்ஷணப்பொழுதும் கூறமாட்டா.

இதனால் நமக்கு விளங்குகிறதென்ன? தேவர்கள், ரிஷிகள் என்னப்பட்டவர்கள் பூர்வத்தில் இருந்த பெரியோர்களும் வீரர்களும் என்றுதான் தோன்றுகிறது. அவர்கள் இறந்தபின்பு ஹிந்துக்கள் அவர்களை தெய்வங்களாக்கிக்கொண்டார்கள். அவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லியிருக்கும் துர்க்கிருத்தியங்களைச் செய்தது மெய்யாயின் அவர்கள் பெரும்பாவிகளாய் இருந்திருக்கவேண்டும். மற்றப்படி அவர்கள் அப்பேர்ப்பட்ட பாவங்களைச் செய்யாதவர்களானால் அந்தச் சங்கதிகளை எழுதினவர்கள் தாங்களும் மற்றவர்களும் பயமின்றிப் பல அக்கிரமங்களை நடப்பிக்கும்பொருட்டு அந்தப் பெரியோர்கள்பேரில் பொய்யான பாதகங்களை ஏற்றிக் கட்டிவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

கடவுள் தாமே தம்மைக்குறித்த விஷயங்களை நமக்கு வெளிப்படுத்தவேண்டும். மற்றப்படி அவரை அறியக்கூடாது. சாஸ்திரக்கர்த்தாக்கள் கடவுளை அறியாதவர்களானதால், பூர்வகாலத்து மகாத்துமாக்களைக்குறித்துப் பல கட்டுக்கதைகளை ஏற்படுத்தி அரும் பிழைகளுக்குட்பட்டார்கள். கிறிஸ்தவ வேதத்திலே தேவன் வழுவாத நீதியும் ஸ்பஷ்ட பரிசுத்தமுமுள்ளவராய் தமக்கு விரோதமாய் எழும்பிநிற்கும் மானிடரை இரட்சிக்க வகைதேடுகிறவராகக் காட்டியிருக்கிறது. அவர் அவர்களை அழிக்க வல்லவராயினும், அவர்களை அழித்துப்போடாமல் அவர்களிடத்தில் அன்புபாராட்டிவருகிறார். அவர் பாவத்தைப் பகைத்தாலும், பாவியைச் சிநேகித்து அவன் தம்மை அடைந்து ரட்சிக்கப்படுவதையே நாடுகிறார். அவர் பெருமையானது அவருடைய சர்வஞானத்திலாவது அவருடைய சர்வசக்தியிலாவது விளங்காமல், அவருடைய அளவில்லாத அன்பிலேமாத்திரம் விளங்குகின்றது. சுவிசேஷ சத்தியமானது ஒரேவார்த்தையில் அடங்கியிருக்கிறது: தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரையே ஒப்புக்கொடுத்து இவ்வளவாய் உலகத்தை நேசித்தார்.

VII. HINDUISM AND CHRISTIANITY COMPARED.

ஹிந்துமதமும் கிறிஸ்துமதமும்.

ஹிந்துமதமானது நேற்றுப்பிறந்த மதமல்ல. அது பூர்வீகமாயிருக்கப்பட்டது. அதை ஏற்படுத்திய உங்கள் முன்னோர்கள் செய்தது தவறென்று நீங்கள் சொல்லத்துணியீர்கள். ஆகிலும், பழமையா யிருப்பதால் மாத்திரம் அது சத்தியமுமாயிருக்கவேண்டுமென்று புத்திமான்கள் சாதிக்கமாட்டார்கள். அதின் பழமையை ஒப்புக்கொண்டாலும் அதின் போதகத்தைப் பரிசோதிக்கவேண்டும். பரிசோதித்து அதிலே அசத்தியமாயிருக்கிறதை விட்டுவிடவேண்டும். உங்கள் மதம் உங்களுக்கு மிகவும் அருமையானது. சிறுவயதுமுதல் நீங்கள் அதை அனுசரித்துவந்திருக்கிறீர்கள். ஆனாலும் அது உங்களுக்கு அருமையாயிருக்கும் தன்மை அல்ல, அதில் விளங்கவேண்டிய சத்தியமே உங்கள் பெருமையாயிருக்கவேண்டும். ஆதலால்

அது அசத்தியமாயிருந்தால் வந்தது வரட்டும் என்று துணிந்து அதைத் தள்ளிவிடுவதே உத்தமம். ஹிந்துமதத்துக்கும் கிறிஸ்துமதத்துக்கும் உள்ள சில பேதங்களாவன:—

1. முதலாவது, ஹிந்துமதமானது பரிசுத்தவிர்த்திக்கு அனுகூலமானதல்ல. அதின் சடங்குகளும் உபதேசங்களும் பெரும்பாலும் பரிசுத்தமானவைகள் அல்ல. இதற்கு உங்கள் மனமே சாட்சி பகரும். உங்கள் மதத்தை நீங்கள் பரிபூரணமாய்ப் பின்பற்றிவந்தால் உங்கள் உள்ளம் பரிசுத்தமாகுமா? ஆகாதென்றுதான் சொல்வீர்கள். கோவிலிலும் தேரிலும், விக்கிரகத்திலும் அசுத்தம் படிந்திருக்கிறது. இதிகாச புராணங்களிலும் அவலட்சணமான காரியங்களைக் காணலாம். இதன்றி, ஹிந்துமதஸ்தர் எதிர்பார்க்கும் மோட்சம் எத்தன்மை உள்ளது? சிற்றின்பம் நிறைந்த வாழ்வுதானே. தற்காலத்தில் ஹிந்து மதம் என்றால் என்ன? எண்ணிறந்த சடங்குகளை இடைவிடாமல் நடத்திவருவதே. சாதிப்பிரஷ்டத்தைப் பெரும்பாதகமாக மதித்தாலும், துன்மார்க்கத்தைப் பாவமாக மதிக்கிறதில்லை. ஹிந்துமதக் கொள்கையின்பிரகாரம் பரிசுத்தன் என்று எண்ணப்படும் ஒருவன் பஞ்சமாபாதகத்தை நடப்பிக்கும் தூர்த்தனுயுமிருக்கலாம். புரோகிதரும் குருக்களும் தங்கள் சிஷர்களின் துர்நடத்தையைப் பாராமல், அவர்கள் எந்த இழிசனரோடு சரிசமமாய்ச் சாப்பிட்டு தங்கள் சாதியைக் கெடுத்துக்கொள்ளுகிறார்களோ என்றுமாத்திரம் கவலைகொள்வார்கள். இப்பேர்ப்பட்ட மதத்தைப் பரிசுத்தமான கடவுள் அருள்வாரோ?

2. இரண்டாவது, ஹிந்துமத சாஸ்திரங்களிலே பாவம் இன்னதென்றும் அதைப் போக்கும் விதம் இன்னதென்றும் கிஞ்சித்தென்கிலும் விளங்குகிறதேயில்லை.

நமக்கும் கடவுளுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தமானது தப்பாயிருந்தால் எல்லாம் தப்பாயிருக்கும்; அது சரியாயிருந்தால் எல்லாம் சரியாயிருக்கும். கல்வி, உத்தியோகம் முதலிய விஷயங்களிலே நாம் எவ்வளவு பேதப்பட்டிருந்தாலும், நாம் பாவிகள்தான்; நம்மெல்லாருக்கும் மன்னிப்பு அவசியம். நம்முடைய சஞ்சலங்களுக்கெல்லாம் பாவமே காரணம். பாவ மன்னிப்புப் பெறவேண்டும் என்பதே நமது பெரும்பாரம். கிறிஸ்துமதம் முதலானது பாவத்தை நீக்கிப் பின்பு அதின் பயனை நிவிர்த்திக்கின்றது. இதை அது ஏனோதானோ என்று செய்யாமல், 'உட்சுவர் தீற்றிப் புறச்சுவர் தீற்று,' என்னும் பழமொழிக்கிசைய அது உள்ளமாகிய ஊற்றைச் சுத்திகரித்

துத் திரிகரண பரிசுத்தம் உண்டாகச் செய்கின்றது. ஹிந்து மதமோ யாத்திரை, தபசு, தீர்த்தம், பிராமணர்க்குப் பிச்சை யிடல், தானதருமம், சத்திரம்முதலியவற்றால் பாவந்தீரும் என்று கற்பிக்கின்றது. ஸ்தலயாத்திரைகள் பாவத்தைப்போக்கி மனதைப் பரிசுத்தப்படுத்துவ தெப்படி? இவ்விடங்களில் நடக்கிற அக்கிரமங்கள் மற்றெங்கும் நடக்கிறதில்லையே. கற்புள்ள ஸ்திரீகள் இந்த ஸ்தலங்களுக்குப் போய், அங்கே நடக்கிறவைகளைப் பார்த்து மாதர்க்கணிகலனாகிய கற்புநிலையை இழந்துவிட ஏதுவுண்டாகிறது. கள்ளர்களுக்கு இதுவே திவ்யமான ஸ்தலம். பெற்றோர் பிள்ளைகளைப் போக்கடித்து விடுகிறார்கள். அனேகர் நோய்பட்டுச் சாகிறார்கள்.

இதுவுமன்றி பேர்போன நதிகளிலே ஸ்நானம்பண்ணுவது பாவத்தை நீக்குவதெவ்வாறு? வண்ணானவன் அழுக்குவஸ்திரங்களை ஒரு பெட்டியிலே போட்டு அதை ஆற்றங்கரைக்குக் கொண்டுபோய் அந்தப் பெட்டியின் வெளிப்புறத்தைமாத்திரம் நன்றாய்க் கழுவுவானானால், உள்ளேயிருக்கும் வஸ்திரங்கள் சுத்தமாகுமோ? அதுபோல் நதிகளிலே ஸ்நானஞ்செய்வதினால் சரீரம் சுத்தமாகுமே தவிர ஆத்துமா ஒருக்காலும் சுத்தமாகாது.

"புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்"

என்று திருவள்ளுவரும் உரைத்திருக்கிறார். இந்த விதமாய் பிச்சையிடுதல் நல்ல காரியமாயிருந்தாலும் அதிலே யாதொரு புண்ணியமுமில்லை. கடவுள் நமக்குத் தந்ததைத்தானே நாம் மற்றவர்களுக்கு இடுகிறோம். நம்மிடத்துள்ளதெல்லாம் அவர் தந்ததே. அதிலிருந்து நாம் எளியவர்களுக்குக் கொஞ்சம் கொடுத்தால், அப்படி கொடுக்கப்பட்டது அவருடைய பொருளல்லவா? பிச்சையிடுவது நமது கடமை. பொக்கிஷக்காரன் ஒருவன் எசமான் உத்தரவினால் எடுத்துக்கொடுக்கும் பணத்தை வாங்குவோர் அவனைப் புகழாமல் அவ்வெசமானைத்தான் புகழ்ந்துகொள்வார்கள். அப்பணம் அவன் சொந்தம் அல்லவே! ஆதலால் நமது பரம எசமானை மேன்மைபடுத்தும்படி நாம் தருமஞ் செய்யவேண்டுமேயல்லாமல், அதை நமது ரட்சிப்புக்கு ஆதாரமாக்கிக்கொள்ளக்கூடாது. இந்தப்பிரகாரம் பாவமானது காணிக்கைகளினாலும், ஸ்நானங்களினாலும், யாத்திரைகளினாலும் ஒருக்காலும் நீங்கமாட்டாது. கிறிஸ்துவின் திரு உதிரமாகிய பிரயாச்சித்தபலி ஒன்றினாலேமாத்திரம் பாவவிமோசன

முண்டாகும். "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எல்லாப்பாவத்தினின்றும் நம்மைச் சுத்திகரிக்கின்றது." "தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு தேவன் அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

3. மூன்றாவது, ஹிந்துமதம் ஹிந்துக்களுக்குமாத்திரம் உரியது; கிறிஸ்துமதமோ உலகத்திலுள்ள சமஸ்த சனங்களுக்கும் பொதுவாயிருக்கிறது. இந்த லட்சணமானது கடவுள் அருளிய சமயத்துக்கு ஓர் விசேஷ அறிகுறியாம். ஹிந்துமதத்தின் லட்சணங்களைப் பார்த்தால் அது ஒரே ஒரு சனத்துக்கு மாத்திரம் ஏற்றதானதென்று தோன்றுகின்றது. ஒரு கிறிஸ்தவனுகிலும் ஹிந்துவாகக்கூடாது. கிறிஸ்தவனுகப்பிறந்த ஒருவன் தன் சொந்த மதத்தை நம்புவதைவிட்டுத் தன் ஆத்தும ரட்சிப்புக்காக ஹிந்து மதத்தை நம்பி அதை அனுசரிப்பானுனல், எந்த ஹிந்துவும் அவனைத் தன் சாதியிலே சேர்த்துக்கொள்ளக்கூடாது. ஹிந்துமதத்தை ஹிந்துதேசத்தில்மாத்திரம் காணலாம்; கிறிஸ்துமதமோ எங்கும் பிரபல்யமாயிருக்கிறது. அது செல்லாததேசமுமில்லை; அதைச்சேராத சாதியும் இல்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர், கற்றோர் கல்லாதோர், ஐரோப்பியர் ஆப்பிரிக்கர், பிராமணர் சூத்திரர் முதலிய யாவரும் அதிலே பிரவேசித்திருக்கிறார்கள். அது சூரியனைப்போல எங்கும் பிரகாசித்து, எல்லாருக்கும் பரிசுத்தத்தையும் பாக்கியத்தையும் வருவிக்கின்றது.

4. நான்காவது, ஹிந்துமதத்தின் ஆதாரம் பயம், கிறிஸ்துமதத்தின் ஆதாரமோ அன்பு. பொல்லாத தேவதைகளுக்கு அஞ்சி அவைகள் சினத்தை விலக்கமுயல்வதே ஹிந்துமத சடங்காசாரங்களின் மூலகாரணம். கிறிஸ்துமதமோவென்றால் தன்னைச் சேர்ந்த யாவரும் கடவுளிடத்திலும் மனுஷனிடத்திலும் அன்புபாராட்டுவதே பரமபுருஷார்த்தம் எனக்கருதி, பிள்ளையைப்போல் கடவுளை அடுத்து, மனுஷர் யாவர்க்கும் நன்மை செய்யவேண்டுமென்று போதிக்கின்றது.

5. ஐந்தாவது, கிறிஸ்துமதம் கல்வி, செல்வம், நாகரீகம் ஆகிய இவற்றை விர்த்திசெய்கிறது; ஹிந்துமதமோ இவற்றிற்குப் பிரதிகூலமாயிருக்கிறது. கிறிஸ்துமதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேசங்களில் சர்வகலாசாலைகளும், கூடகோபுரங்களும், சிங்கார நகரங்களும், செல்வமுள்ள குடிகளும் இருக்கக்காண்கிறோம். ஹிந்துமதத்தைச்சேர்ந்த ஊர்களும் கிராமங்களும் எத்தனை அவலட்சணமாயிருக்கின்றன? மேலும் சாஸ்திரபயிற்

சியும் கல்வித்தேர்ச்சியும் கிறிஸ்தவ தேசங்களிலே மாத்திரம் சிறப்பாயிருக்கின்றது. உதயமாகும் சூரியன்முன்னே இருள் ஓடிவிடுவதுபோல, திவ்ய ஒளியாகிய கிறிஸ்துமதத்தின்முன் னே அஞ்ஞான அந்தகாரம் பறந்தோட உலகத்திலே அறிவும் ஞானமும் அபிவிர்த்தியாகிறது.

இந்த மதத்தைக் கருத்துடன் ஆராய்ச்சிசெய்யுங்கள். தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களின் நடத்தையைமாத்திரம் நோக்கவேண்டாம். மெய்க்கிறிஸ்தவர்களுமுண்டு, பொய்க்கிறிஸ்தவர்களுமுண்டு. ஒவ்வொருமரத்தையும் அதின் கனியால் அறியலாம். கிறிஸ்துமதமானது பாவத்தின்தன்மையையும் அதைப் போக்கிக்கொள்ளும் விதத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் தெளிவாய்க் கூறுகின்றது. ரவை ரத்தினங்களை ஒன்றோடொன்று ஒத்திட்டுப்பார்ப்பதுபோல, கிறிஸ்துமதத்தையும் ஹிந்துமதத்தோடு ஒத்துப்பாருங்கள். கிறிஸ்துவின் சரித்திரத்தை வாசியுங்கள். வாசிக்க வாசிக்க அவரே உலக ரட்சகர் என்று உங்களுக்குப் புலப்படாமற் போகாது.

VIII. HINDUISM AND THE BHAGAVATA PURANAM.

ஹிந்துமதமும் பாகவதமும்.

1. ஹிந்துக்கள்மாத்திரமே அல்லாமல் பிராமணர்களும் தற்காலம் பிரிட்டிஷ் அரசாட்சியின்கீழ் சிரமப்படுகிறதுபோல தங்கள் சுதேச ராஜாக்களிடத்திற் பட்டதேயில்லை என்று எல்லாரும் குறைகூறுகிறதுண்டு.

பாகவதம் பர்வம் vi. அத்தி. xvi. சுலோகம் 23–34ல் கூறியிருக்கிறதாவது:—"பிரஜைகளே கேளுங்கள், நான்கு வர்ணத்தாரே, பிராமணரே, செவிகொடுங்கள். என் ராஜ்யத்திலே நீங்கள் பலியிடக்கூடாது; உங்கள் பிதாக்களின் தெய்வங்களை நீங்கள் கும்பிடலாகாது; நீங்கள் காணிக்கை வாங்கலாகாது; பிராமணர்கள் பாதத்தண்டை ஒருவரும் யாத்திரை போகலாகாது; உலகத்தில் பூஜைக்கிரமங்கள் அனந்தமாயினும், அவற்றையெல்லாம் நீங்கள் எனக்கே செய்யவேண்டும்; எனக்குப் பெரியவர் யாரும் இல்லை; பிரத்தியட்ச ஆண்டவனாகிய

என்னை நீங்கள் வணங்கி எனக்கே தீவளர்க்கவேண்டும்; என் வார்த்தைகளை லட்சியம்பண்ணாதவன் என் ராஜ்யத்திலே ஒரு நாழிகை இருக்கப்படாது; இருப்பவனுடைய சொத்துக்கள் யாவும் எடுத்துக்கொள்ளப்படும். இந்த விளம்பரம் கிராமங்களிலும் பட்டணங்களிலும் எக்காளத்தொனியுடன் பிரசித்தப்படுத்தப்படும்.'' இதைக் கேட்ட எல்லாரும் திகிலடைந்து பாவராஜாவின் சொற்படியே தத்தம் மதத்தை விட்டுவிட்டார்கள்; பிராமணர் பிரதி தினமும் அவன் பேரை ஸ்துதித்து பயபக்தியுடன் அவன் பாதத்தைச் சேவித்துவந்தார்கள்.

இந்த பாவராஜன்முதலான கொடிய அரசர்களின் காலத்திலே பிராமணருக்கு என்ன கௌரவம் இருந்தது? ராஜகட்டளைக்குப் பயந்து தங்கள் மதத்தை விட்டுவிடுவது வெகு இழிவு அல்லவா?

2. ஜீவஜெந்துக்களைக் கொல்வது பாவம் என்பது ஹிந்துக்களின் சாதாரண கொள்கைகளில் ஒன்று. ஆனால் எத்தனைபேர் மாமிசபட்சணிகளாயிருக்கிறார்கள்? முற்காலத்திலிருந்த ரிஷிகள் மான்வேட்டையாடிக் காலக்ஷேபம் செய்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. சீதையை ராவணன் பறிகொண்டுபோகிற சமயத்தில் ராமர் வேட்டைக்குப் போயிருந்து பின்பு தான் கொன்ற மான்களை வீட்டுக்குக் கொண்டுவரவில்லையா? பாகவதபுராணத்திலே விசேஷமாகப் புகழ்பெற்றிருக்கிற துர்க்கையை என்னவென்று சொல்வோம்! எத்தனைத்தான் மனிதனையும் பேய்களையும் தின்றாலும் அவள் பசி தீருகிறதில்லை. உதாரணமாக, மேற்படி புராணம் v. பர்வம், ix. அத்தி. 85-ம் சுலோகத்திலே "கேளும் மஹாராஜாவே, அவள் (துர்க்கை) அவன் கையிலிருந்த வாளை எடுத்து, உதிரபானம்பண்ண விரும்பி அவனைச் சிரச்சேதம்பண்ணினாள்; பின்பு அவள் தன் தோழரைச் சந்தோஷிப்பிக்கும்படி அவர்களை அழைக்க, அவர்களும் பாய்கிற உதிரத்தை உண்டு மனங்களித்தார்கள்.'' அவர்கள் தேவர்களானமையால் எதையும் செய்யலாமென்றால், அச்சமயத்தில் அவர்கள் மானிடரூபிகளாயிருந்தார்களே.

3. பற்பல சடங்காசாரங்களினாலே மோட்சம் அடையலாம் என்பதும் ஹிந்துக்களுடைய கோட்பாடாயிருக்கிறது. பர்வம் v. அத்தி. i. 73லே பாவரகிதனான சபலராஜன் பஹிரங்கமான மதாசாரங்களையெல்லாம் ஒழித்துவிட்டானென்று சொல்லியிருக்கிறது. இதற்கு எதிரிடையாக x. பர்வம், iii. அத்தி. 49 முதலிய சுலோகங்களிலே சத்திய யுகத்தில் மதமானது நாலுகாலால் நடந்ததென்றும், திரேதாயுகத்தில் ஒருகாலும்,

துவாபரயுகத்தில் மற்றொருகாலும், இந்த கலியுகத்தில் இன்னும் ஒருகாலும் இழந்து, இப்பொழுது அது இரக்கம் என்கிற ஒற்றைக்காலால் நடக்கிறதென்றும் கூறியிருக்கிறது. ஆகவே, இரக்கமே மதமானால் தீர்த்தயாத்திரைகள் மந்திரதந்திரங்கள் முதலியவற்றின் பயன் என்ன? அவற்றில் யாதொரு இரக்கமும் இல்லையே.

4. ஒருவன் தன் தெய்வங்களைப் பூசித்தாலுமே போதும், அவன் நடத்தை எப்படியிருந்தாலும் இருக்கலாம் என்று ஹிந்துக்கள் சொல்லுகிறதுண்டு. ஒருவன் பஞ்சமாபாதகனாயிருந்தாலும் ராமனுக்காகிலும் கிருஷ்ணனுக்காகிலும் உத்தம சேஷனாயிருந்தால் மோட்சமடைவான் என்கிறார்கள். இதற்கு ஆக்ஷேபனையாக பாகவதம் vi. பர்வம், ix அத்தி. 59, 60-ம் சுலோகங்களில் "தன் பூர்வ பாவங்களை உணராதவன் உதவியற்று சுகதுக்கங்களிலே தன் வாழ்நாளைக்கழித்துக் கடைசியிலே நரகத்தில் விழுவான்" என்று கூறியிருக்கிறது.

5. ஜீவாத்மாவெல்லாம் பரமாத்மாதான் என்று ஹிந்துக்கள் சாதிக்கிறார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக, பாகவதம் x. பர்வம், ii அத்தி. 51லே சொல்லியிருக்கிறதாவது: "நூறு குடங்களிலே தண்ணீர்நிரப்பி வெளியில்வைத்தால் ஒவ்வொரு குடத்திலும் ஆகாயத்தைப் பார்க்கலாம். ஜலத்தையெல்லாம் எடுத்து ஒரே குடத்தில் ஊற்றினாலோ அவ்வொரு குடத்தில்மாத்திரம் ஆகாயம் பிரதிபிம்பமாகும். குடங்கள் உடைந்துபோனாலும் ஆகாயம் பின்னப்படாமலிருக்கிறதுபோலவே பரமாத்மாவும் இருக்கிறது. இது ஞானிகளுக்குமாத்திரம் விளங்கும்." இந்த சுலோகத்திலே விளங்குகிறதென்னவென்றால், தெய்வத்தின் சாயல் சிருஷ்டியிலே தோன்றுகிறதென்பதே. ஆனால் ஆகாயத்தின் சாயல் ஆகாயம் ஆகாததுபோல் கடவுளின் சாயலும் கடவுளாகாது. பதினோராம் பர்வத்திலே இதற்கு நேர் விரோதமான சுலோகம் ஒன்றுண்டு. அதாவது: கடவுள் ஆவியாயிருக்கிறார்; அவருக்கு ஒப்பான யாதொரு சிருஷ்டியும் இல்லை; ஜீவமாத்மாக்கள் பரமாத்மாவை தியானிக்குமானால் அவற்றிற்கு பாக்கியம் உண்டாகும் என்பதே.

6. ஹிந்துக்கள் தங்கள் மதம் நித்யமாய் நிலைத்திருக்கும் என்கிறார்கள். இது உண்மையாயின் வியாஸதேவர் உரைத்திருப்பது பொய்யாயிருக்கவேண்டும். அவர் xii பர்வம், i. அத்தி. 179ல் சொல்லுகிறதாவது: துருக்சர் நீக்குப்போக்கில்லாமல் 14 தலைமுறை ஆளுவார்கள்; அதன்பிறகு பிரிங்கிகள் (ஐரோப்பியர்) 13 தலைமுறை ஆண்டுவருவார்கள். அந்தக்கா

லத்திலே மதம் அழிந்து சாதிக்கிரமங்கள்யாவும் ஒழிந்துபோகும் என்கிறார். மேலும், xii. பர்வம், ii. அத்தி. 115லே பல சாதிகள் ஒரிடத்திற் கூடி மனப்பூர்வமாய் விருந்துண்பார்கள்; பிராமணர்கள் வேதத்தை விற்றுப்போடுவார்கள்; காலக்கிரமத்திலே வேதபாராயணமும் ஒழிந்துவிடும்; எவனும் தன் பரம்பரைமார்க்கத்தை அனுசரிக்கமாட்டான்; தன் சாதிக்கட்டுப்பாடுகளையும் மதிக்கமாட்டான்; கொள்வினை கொடுப்பினையிலும் சாதிப்பிரஷ்டத்தைப் பார்க்கமாட்டாகள்; சகலரும் ஒரே சாதியாயிருப்பார்கள். இந்தவிதமாய் கலியுகம் பதினாயிரம் வருஷமிருந்து பின்பு முடிவுபெறும் என்று கூறியிருக்கிறது.

இந்த முன்னோர் வாக்கின்படியே இந்த யுகம் முடியுமுன், ஐரோப்பியர் இத்தேசத்திலிருக்கும்பொழுதே, ஹிந்துமதம் வெகுவாய் மாறிவிடும் என்று உத்தேசிக்கவேண்டும்.

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துக்கொள், அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்." "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று நமது இரட்சாபெருமான் திருவாய் மலர்ந்தருளுகிறார்.

IX. THE IMMORAL TENDENCY OF HINDUISM.

ஹிந்துமதம் துன்மார்க்கத்தை விளைவித்தல்.

கடவுளருளிய மதமானது காமக்குரோதலோபமதமாச்சரியங்களை அழித்து, பெற்றோர் பிள்ளைகளிடத்தும் பிள்ளைகள் பெற்றோரிடத்தும் அன்பு பாராட்டும்படி அவர்களை ஏவி, பொதுவிலே மனுஷனானவன் சன்மார்க்கநிலை தவறாது நடக்க அவனை எவ்விதத்திலும் தூண்டிவிடும் தன்மையதாயிருக்க வேண்டுமென்று நம்முடைய சாமானிய புத்தியால் அறிந்து கொள்ளுகிறோம். இஃது ஹிந்துமதத்தின் தன்மையோ என்று விசாரிக்குமளவில், மற்ற விஷயங்களில் எவ்வாறோ அவ்வாறே இவ்விஷயத்திலும் அது அதிக குறைவுபாடுள்ளதாயிருக்கின்றது. ஏனென்றால்,

வேதங்களிலே பழி, பகை, பொருளாசை, வியபிசாரம் முதலிய பாவங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. "சபிக்கும் வேதம்" எனச் சிறப்புப்பெயர் பெற்றிருக்கும் அதர்வண வேதத்திலே சத்துருக்களைச் சபிக்கத்தக்க பலவித மந்திரங்கள் அடங்கியுள்ளன. சாமவேதத்திலிருந்து ஒரு சுலோகத்தைமாத்திரம் எடுத்துரைப்போம்: பரிசுத்த தர்ப்பையே, என் பகைஞரை அழித்து, என் சத்துருக்களை வேருடன் அறுத்துவிடு: ஓ சிகாமணியே, என்னைப் பகைக்கின்ற யாவரையும் நிர்த்தூளியாக்கிவிடு. ஓ இந்திரனே, பேராசைபொருந்திய எங்கள் பகைவரை நாசமாக்கி, தயைதாட்சண்யமுள்ள எங்கள் நண்பரை விர்த்திசெய். எங்களுக்கு ஆயிரமடங்கான அழகுள்ள பசுக்களும் குதிரைகளும் அளித்து எங்களை மேலோராக்குவாய்.

அடியில் வரும் பிரார்த்தனையினாலே வேதங்களிலே பொருளாசையும் போதிக்கப்படுகின்றதென்பது பிரத்தியட்சமாகின்றது. "எங்களுக்கு அதிக ஐஸ்வரியம் உண்டாகும்படி, இந்திரனே, உன்னைப் பிரார்த்திக்கின்றோம். அதை நீ மனிதரிடத்திலிருந்து கொண்டுவந்தாலும் சரி, தேவரிடத்திலிருந்து கொள்ளையிட்டு வந்தாலும் சரி, அதை நீ அடிவானத்திலிருந்து அடைந்து வந்தாலும் சரி, மற்றெவ்விடத்திலிருந்து புரட்டி வந்தாலும் சரி, எங்களை எவ்வாறாயினும் தனவான்களாகச் செய்." இருக்கு வேதத்திலே, "ஓ இந்திரா, எங்களை மேலோர் வகுப்பிற் சேர்த்து, எங்களுக்குப் பொருள், பெண்கள், கல்வி, உணவு ஆகிய இவற்றைத் தந்தருள்வாயாக" என்றொரு செபமும் உண்டு. இதன்றி, பகவத்கீதையிலே, கிருஷ்ணன் "பொருளை வாஞ்சிப்போர் குற்றவாளிகள் அல்ல, நல்லோரே" என்று கூறுகிறார்.

மனுதர்மசாஸ்திரத்திலே ஒருவன் தன் மனைவி உடன்பட்டால் விபசாரம் பண்ணலாமென்று மாத்திரமல்ல, அவசியம்பண்ண வேண்டும் என்றும்; பண்ணாமற்போனால் குஷ்டரோகியாய் விடுவானென்றும் ஒரு சட்டவிதியால் விசதமாகிறது. மஹாபாரதத்திலும் இதற்கிசைவான ஒரு உபதேசமுண்டு. மேலும், யாதாயினும் ஓர் சடங்கை நிறைவேற்றும்பொருட்டு ஒருவன் திருடலாமென்றும், நன்மை செய்யும்பொருட்டு ஒருவன் தப்புச்சாட்சி சொல்லலாமென்றும், ஒரு பிராமணனுடைய உயிரைக் காக்கும்பொருட்டும், தன் மனைவியின் சினத்தைத் தணிக்கும்பொருட்டும், வேசியைப் பிரியப்படுத்தும்பொருட்டும் பொய்சொல்லலாமென்றும் மேற்படி தர்மநூலில் விதித்திருக்கின்றது. மேலும் குருடு, செவிடு, முடம், ஊமை, அங்க

வீனம், குஷ்டம் முதலிய குறையுள்ள ஆண், பெண்கட்குச் சுதந்தரம் இல்லை என்றும், தற்கொலை செய்துகொள்வதே அவர்களுக்கு உத்தமம் என்றும் அதிலே கூறியிருக்கின்றது.

புருஷனுக்கும் பெண்சாதிக்கும் இருக்கவேண்டிய ஐக்கியத்தைக்குறித்தாவது, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கவேண்டிய அன்பைக்குறித்தாவது வேதங்கள் அவ்வளவாய்ப் போதிக்கிறதில்லை. இதற்கிசைய பரசுராமன் தன் தாயாரை உயிர்வதை செய்தது தர்மமென்றும், பிரஹலாதன் தன் தந்தை சொற்கேளாமல் அவனுடைய பிராணச்சேதத்திற்குக் காரணனானது மிக்க புண்ணிய செயலென்றும் கூறப்பட்டிருக்கிறது.

அன்றியும் பெண்கள் ஆண்களைப்பார்க்கிலும் இழிந்தவர்களென்றும் வேதங்களிற் போதித்திருக்கின்றது. அவர்கள் வேதத்தை ஒருக்காலும் ஓதவும் கேட்கவும் கூடாது. மநுதர்மசாஸ்திரத்திலே மனைவிக்குப் புருஷன் இட்டதே சட்டமென்றும், அவன் அவளை விபசாரம்பண்ணச் சொன்னாலும் அவள் அதை மறுக்காமல் பண்ணவேண்டுமென்றும் விதித்திருக்கின்றது. அவ்வாறு செய்த அநேக ஸ்திரீகளைக்குறித்துச் சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறது. ஸ்கந்தபுராணத்திலே கண்டிருக்கிறதாவது: "பரிசுத்த ஸ்நானனுஷ்டானங்களைச் செய்யவிருக்கும் மனைவியானவள் முதல் தன் நாயகன் பாதங்களைக் கழுவி, அக்கழுவின சலத்தைப் பானம்பண்ணவேண்டும்; ஏனென்றால், மனைவிக்குப் புருஷன் விஷ்ணுவிலும் சிரேஷ்டன். அவன் அவளுக்குக் கடவுளும், குருவும், மதமும், அதின் ஆசாரமுமாயிருக்கிறான்: ஆதலால் அவள் சகலத்தையும் துறந்து தன் புருஷனை விஷ்ணுவாகப் பாவித்து அவன் ஒருவனையே பூசித்து நடக்கவேண்டும். அவள் அன்பில்லாவார்த்தை ஒன்று சொன்னாலுமே அவன் அவளை நீக்கிவிடலாம்" என்று மனு உரைத்திருக்கிறார். அவன் அவளை நோக்கி "இனி நீ என் மாதா" என்ற மாத்திரத்தில் அவர்களின் ஸ்திரீபுருஷ சம்பந்தம் அற்றுப்போகிறது. அதுவுமன்றி பாதாரசமனமும் உபதேசிக்கபபட்டிருக்கிறது. ஸ்திரீயானவள் இந்த கஷ்டநஷ்டங்களையெல்லாம் பொறுமையுடன் சகித்துவருவதும் போதாமல் தன் நாயகன் இறந்தபின்பு அவனுடைய பிரேதத்துடன் தன்னையும் தகித்துக்கொள்ளவேண்டிய புண்ணியசாலியாகவும் தீர்க்கப்பட்டிருக்கின்றாள்.

மேலும் சகலவிதமான அக்கிரமங்களும் அவலட்சணங்களும் யாதொரு நாணமின்றிக் கூறப்பட்டிருக்கின்றன. திரி

மூர்த்திகளும் முக்கியமான இரண்டு அவதாரபுருஷர்களும் நடப்பித்ததாகச் சொல்லியிருக்கும் துர்க்கிருத்தியங்கள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. மற்றத்தேவதைகள், முனீஸ்வரர்கள், ரிஷிகள் முதலானோருடைய நடபடிக்கைகளும் அவ்வாறே உள்ளன. வருணன் ஊர்வசி என்னும் தேவதாசியோடு செய்த விபசாரத்தினால் ரிஷிகளிலே பேர்போன அகஸ்தியன் பிறந்தான். பலராமன் குடியனும், தூர்த்தனும், சூதாடியுமாயிருந்தான்; அதற்கவன் சகோதரன் கிருஷ்ணனே சாட்சி. வேதங்களைச் சேகரித்து வேதாந்தசாஸ்திரத்தையும் பதினெண் புராணங்களையும் இயற்றிய வேதவியாஸன் வியபிசாரத்திற் பிறந்து, தன் சகோதரனுடைய மூன்று மனைவிகளையும் சேர்ந்து மூன்றுபிள்ளைகளைச் செனிப்பித்தவன். அவர்களில் ஒருவன் பாண்டு. இந்தப் பாண்டுவின் ஐந்துபுத்திரரும் திரௌபதை என்ற ஒரே பெண்ணை ஆண்டுவந்தார்கள். மேலும் சக்திப் பூசையிலும், காளிப் பூசையிலும், ஹோலி என்னும் உற்சவத்திலும் ஆடவராலும் மகளிராலும் பாடப்படும் அசுத்தமான பாட்டுக்களை இவ்விடத்தில் எடுத்துரைக்கவேகூடாது.

எமதன்பராகிய ஹிந்துக்களே, இதுகாரியங்களை நீங்களே சீர்தூக்கிப்பாருங்கள். இப்படிப்பட்ட உபதேசங்களையும் விதிகளையும் விசேஷமாக உடைய உங்கள் மதத்தை அநுசரித்திருக்கும் பிரசைகளின் நடத்தை எவ்வாறாகும்? மரமெப்படியோ அப்படியே அதின் கனியும். விதிவிலக்குகள் தீதாயின், நடபடிக்கையும் தீதாகும். தங்கள் மதத்தைவிடச் சீராயிருக்கும் சனமும் உண்டோ? ஹிந்துக்களிடத்திலே தங்கள் மதத்தால் விளைந்திருக்கும் துன்மார்க்கத்தைக் காணும்பொழுது, மதம் எவ்வாறோ அவ்வாறே அதை அநுசரிப்போரும் என்றே துணியவேண்டும்.

X. CHRIST AND KRISHNA.
கிறிஸ்துவும் கிருஷ்ணனும்.

கிறிஸ்தவர்கள் தொழுதுவருகிற கிறிஸ்துவும் ஹிந்துக்கள் தொழுதுவருகிற கிருஷ்ணனும் ஒரே வஸ்துவென்றும், இவர்களுக்கு நாமபேதம் ஒன்றுதவிர வேறொரு பேதம் இல்லை என்றும் அநேக ஹிந்துக்கள் சொல்லுகிறதுண்டு. ஆனால் இவ்விருவருக்கும் நாமபேதம் மாத்திரமல்ல, விசேஷமான அனந்தம்

பேதங்கள் உண்டென்பதை நமதன்பர்களுக்கு விளக்க விரும்புகின்றோம். கிருஷ்ணன் தெய்வ அவதாரம் அல்லவென்றும், மனுஷர் விசுவாசித்துப் பூஜிக்கத்தக்க வஸ்துவல்லவென்றும் திருஷ்டாந்தப்படுத்தும் பலத்த பல நியாயங்கள் உண்டு. இவ்விருவருடைய ஜநநம் பாலபருவம் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஒருவாறு ஒத்திருக்கிறது வாஸ்தவம் தான். ஆகிலும் கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களும் ஆதியிலே ஒருவரை ஒருவர் சந்தித்துச் சம்பாஷித்ததினால் கிருஷ்ணன் கதையிலே கிறிஸ்துவின் ஜநநவிஷயங்கள் சில புகுந்தனவென்று தோன்றுகின்றது. நாரதனும் மற்றும் சிலரும் 'ஸ்வேததீவு' என்னும் ஓர் வெண்தேசத்தைப் பார்க்கப்போனதாகவும், அத்தேசத்தார் வெண்ணிறம்பொருந்திச் சந்திரக்காந்தியுள்ளவர்களாயிருந்ததாகவும் மஹாபாரதம் 12-ம் பர்வம் 12771-12903-ம் ஸ்லோகங்களில் கூறியிருக்கிறது. கிறிஸ்துமார்க்கம் ஸ்தாபித்துச் சிலகாலமானபிறகு சில பிராமணர்கள் அலெக்சந்திரியா அல்லது சின்ன ஆசியாவுக்குப் போய் கிறிஸ்துவேதத்தை வாசித்து கடவுளின் ஏகத்துவத்தைப்பற்றியும் கிறிஸ்துவின் பிறப்பு வரலாற்றைப்பற்றியும் சில சங்கதிகள் அறிந்துகொண்டு, திரும்பிவந்து தேவகியின் புத்திரனான கிருஷ்ணராஜனுக்கு அற்புதமான ஜனனோற்பத்திக் கதைகள் முதலானவற்றைக் கட்டுவித்தார்கள் என்று மேற்படி ஸ்லோகங்களால் விளங்குகின்றது. சதுர்வேதத்திலாவது மனுதர்ம சாஸ்திரத்திலாவது அவதாரங்களைக்குறித்து ஒரு அட்சரமானாலும் இல்லை. ஹிந்துக்கள் கிருஷ்ணனை விசுவாசிக்கலாகாதென்பதற்கு நியாயங்களாவன:—

I. கிருஷ்ணன் என்று ஒருவர் இவ்வுலகத்தில் இருந்தாரென்பதற்குத் திருப்திகரமான திருஷ்டாந்தம் இல்லை.

மதுரையிலே பிறந்து, பின்பு துவாரகாபுரியிலே அரசு செய்த கிருஷ்ணன் என்னும் நாமதேயம்பெற்ற ஓரரசன் இருந்ததாகமாத்திரம் புராணங்களினால் நமக்குத் தெரியவருகிறது. அவரைக் கண்ணாலே கண்டவர்களோ அவரைக் குறித்து ஒன்றும் எழுதவேயில்லை. புராணகர்த்தாக்கள் தாங்கள் கிருஷ்ணனோடுகூட விருந்தவர்கள் என்று சாதிக்கிறதில்லை. மஹாபாரதம் என்னும் பூர்வ காவியத்திலும் கிருஷ்ணனுடைய வரலாறுகள் கண்கண்ட சாட்சியமாகச் சொல்லப்படாமல் பரம்பரையாய்க் கேட்டுவந்த கதையாகமாத்திரம் உரைத்திருக்கின்றன. கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்ததாகச் சொல்லியிருக்கும் சம்பாஷணைச் சங்கிரகமாகிய பகவத்கீதையும் அந்

தச் சம்பாஷணையைத் தன் காதால் கேட்டவன் எழுதினதல்லவே. கிருஷ்ணனுடைய ஒரு செயலாகிலும் சொல்லாகிலும் நிஜமென்பதற்கு யாதொரு அத்தாட்சியும் இல்லை. ஆதலால் கிருஷ்ணன் என்றொருவன் பூர்வத்தில் இருந்ததுமாத்திரம் சத்தியமென்றும், அவனைக்குறித்து வர்ணித்திருக்கிற மற்றவையெல்லாம் புலவர்கள் கல்பனையென்றும் இந்த நியாயங்களினால் நன்கு விளங்குகின்றது. கிறிஸ்துவின் சரித்திரம் அப்படியல்ல. அவரோடிருந்து அவருடைய செயல்களையும் உபதேசங்களையும் கண்டும் கேட்டும் இருந்தவர்களே அவற்றை விவரித்தெழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியது உண்மையென்பதற்கு அத்தாட்சியாக அவர்கள் கொடிய வேதனை சகித்துத் தங்கள் பிராணனையும் இழந்துவிட்டார்கள்.

II. கிருஷ்ணனைப்பற்றிச் சொல்லியிருக்கும் சங்கதிகளின் தன்மையைப் பார்க்கும்பொழுது அவை அவதாரமெடுக்கும் பரிசுத்த கடவுளின் லட்சணங்களாகத் தோன்றவே இல்லை. கிருஷ்ணனுடைய செயல்களிலெல்லாம் பாவம் கலந்திருக்கிறது. சில செயல்கள் அறிவில்லாத பாலியருக்குமாத்திரம் உரியன. கிருஷ்ணன் நடப்பித்த கொலை களவு காமவிகாரங்கள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. கிருஷ்ணனுடைய அசுத்த நடத்தையையும் கிறிஸ்துவின் பரிசுத்த நடத்தையையும் ஒத்துப்பார்த்து எந்த நடத்தை தெய்வ நடத்தையாகத் தோன்றுகின்றதென்று நீங்களே சொல்லுவீர்கள். கிறிஸ்துவின் செயல்களிலும் சொற்களிலும் விளங்கும் பொறுமை, சாந்தம், தயவு, பரிசுத்தம், பச்சாத்தாபம் ஆகிய சத்வகுணங்களும், கடைசியிலே அவர் தமது சீவனை உலகத்தின் பாவத்தைத் தீர்க்கும் பலியாகச் சமர்ப்பித்துக்காட்டிய அளவில்லாத அன்பும், அவருடைய தெய்வீசத்தைப் பூரணமாய் ரூபிக்கின்றன.

III. கிருஷ்ணனிடத்திலாவது கிருஷ்ணபூசையிலாவது மனதைச் சுத்திகரிக்கும் சக்தி எள்ளளவும் இல்லை. துஷ்ட சண்டாளனாயிருந்த ஒருவன் கிருஷ்ணனிடத்தில் நம்பிக்கை வைத்ததினாலே பரிசுத்தனானதை எங்களுக்கு அறிவிக்கும்படி உங்களைக் கேட்கின்றோம். கிருஷ்ணபூசையானது மனுஷரைப் பரிசுத்தமாக்குவதற்குப் பதில் அவர்களைத் துன்மார்க்கராக்குகின்றது. அவனைப்பற்றிய கதைகளெல்லாம் காமவிஷயமானவைகள். இதனால் மனுஷருக்குப் பரிசுத்தமும் பயபக்தியும் உண்டாகுமோ? கிறிஸ்துவோ உலகத்தைப் புதுப்பித்திருக்கிறார். அவரை விசுவாசிப்பதினால் மனிதரின் தீயமனம் தூயமனமாகி அவர்களுக்குள்ளிருக்கும் பாபசுபாவம் பலமற்றுப்

போகின்றது. இதற்கு எண்ணிறந்த பேர் தங்கள் சுய அநுபோகத்தைக்கொண்டே சாட்சியிடுவார்கள். கிறிஸ்துவின் சரித்திரத்தைக் கருத்தாய் வாசித்து அவருடைய திருநடத்தையைக் கவனித்துப் பார்ப்பீர்களானால், நீங்களும் அவரை நோக்கி, "ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நித்திய சீவனுக்குரிய வார்த்தைகள் உம்மிடத்தில் இருக்கின்றனவே" என்பீர்கள்.

IV. கிறிஸ்துவினுடைய அவதாரத்தின் கருத்தையும் கிருஷ்ணனுடைய அவதாரத்தினாலுண்டாயிருச்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிற விஷயத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்காலத்தில் இருவருடைய பிறப்புக்காரணங்கள் ஒன்றுக்கொன்று வெகு வித்தியாசமுள்ளவைகளா யிருக்கின்றன.

கிருஷ்ணன் கம்சன் முதலிய இராட்சதர்களைச் சம்ஹாரம் செய்வதற்காக அவதார மெடுத்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தக்கிரியையை முடிக்க அவதாரம்செய்ய அவசியமேயில்லை. மேலும் இப்படியாகச் சம்ஹாரம்செய்து முடித்தபின்னும் பூலோகத்திலே யிருந்து துர்க்கிருத்தியங்களைச் செய்துகொண்டிருந்ததாய் விளங்குகிறது. ஆனால் கிறிஸ்துவோ விசுவாசிகளுடைய பாவத்தின் கூலியாகிய தண்டனையைத் தாமே யுத்தரித்து தெய்வநீதியை வெளிப்படுத்த அவதாரமாகியிருக்கிறார். இப்படிப்பட்ட கருத்து அவதாரத்துக்குப் பாத்திரமாயும் சாமானியமாய் அவதாரமில்லாமலே நிறைவேறக்கூடாததாயுமிருக்கிறது. சுய வல்லமையினால் துஷ்ட ராட்சதரைச் சங்கரித்துப்போடலாம். ஆனால் அறிவில் சிறந்த மனிதர் பாவத்தில் விழுந்துவிட்ட பின்பு அவர்களைப் பாவத்திலிருந்து மீட்டு, தேவநீதிக்கும் பரிசுத்தத்துக்கும் தக்கபடி சன்மார்க்கராக்குவதற்கு வல்லமைமட்டும் போராது. ஆகையால் இரட்சிப்புக்கு ஒரு சூத்திரம் அல்லது விதி எற்படுத்தப்படவேண்டும். அந்தச் சூத்திரத்தில் அல்லது விதியில் பாவத்தினால் உண்டாகும் தீமையையும் அப்படிப்பட்ட தீமையினாலுண்டாகும் தண்டனையிலிருந்து மனிதன் இரட்சிக்கப்படும் விதத்தையும் இந்த இரட்சிப்பு தேவ இரக்கம் நீதி பரிசுத்தம் இவைகளினாலுண்டாகிறது என்பதையும் விபரித்துக் காட்டப்பட்டிருக்கவேண்டும். இப்படிப்பட்ட சூத்திரம் அல்லது விதி கிறிஸ்துமார்க்கத்திலே தவிர வேறெந்த மார்க்கத்திலும் கிடையாது என்பது பிரத்தியட்சமான காரியம். அந்தச் சூத்திரம் என்னவென்றால் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியசீவனை அடையும்படிக்கு அவரையே

தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என்பது தான். கிறிஸ்துவானவர் தேவமனிதனுகவும் அவருடைய மரணமானது விலைமதிப்பைக் கடந்ததுமானபடியால் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் தேவன் தம்முடைய நீதிக்குச் சரிக்கட்டி அங்கீகரித்தார். மனிதரின் பாவங்களைக் கிறிஸ்துவின் நிமித்தமாகமாத்திரம் தேவன் மன்னிக்கிறபடியால் பாவத்தினுலுண்டாகும் தீமை எவ்வளவு பாரித்ததாயிருக்கிறதென்பதும் கிறிஸ்துவே பாவிக்குப்பதிலாய் நின்று உத்திரவாதம் செய்யாதிருப்பாராஞல் பாவியானவன் கிறிஸ்துவையல்லாமல் தேவன் சமுகத்தில் நேரிலே நின்றுகொள்ளக் கூடாதென்பது திண்ணமே.

V. கிறிஸ்து அவதாரமும் கிருஷ்ண அவதாரமுமாகிய இவ்விரண்டின் பிரயோகமும் பிரயோஜனமும் ஒன்றுக்கொன்று பெருத்த வித்தியாசமுள்ளதாயிருக்கிறது.

இராட்சத சம்ஹாரனுகமாத்திரம் வந்த ஒருவனுடைய செய்கைகள் மானிடஜாதியின் பாவங்களை யெப்படிப் போக்கிவிடக்கூடும் என்று கிரகித்துக்கொள்ள எதுவில்லாமலிருக்கிறது. மேலும் கிருஷ்ண அவதாரத்துக்குமுன் பூவிலிருந்தவர்களுக்கும் இப்போதிருக்கிறவர்களுக்கும் மேற்படி அவதாரத்திஞல் என்ன பிரயோஜனமுண்டாகிறதென்பதும் புலப்படவில்லை. ஆஞல் கிறிஸ்துவோ விசேஷித்த பிரகாரமாய் பாவிகளான எல்லாருக்காகவும் அவனவன் தன்தன் மீறுதல்களுக் கடைய வேண்டிய தண்டனைகளைத் தாமே உத்தரித்து மரணமடைந்திருக்கிருர். பாவமானது பூலோகத்தில் பிரவேசித்தபோதே கிறிஸ்துவின் வருகையும் அவருடைய புண்ணிய கிரியைகளும் வாக்குத்தத்தமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய வருகைக்காகக் காத்திருந்தவர்களும் வந்தபின் அவரை விசுவாசித்தவர்களும் அவருடைய புண்ணிய பலத்திஞல் இரட்சிப்பைப் பெற்றிருக்கிருர்கள். முந்திஞேரின் விசுவாசம் எதிர்கால நோக்கமுள்ளதாயிருந்தது; பிந்திஞேரின் விசுவாசம் நிறைவேறித் தீர்ந்ததாகவிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்மை நம்புகிறவர்களுக்குமாத்திரம் அவர்களின் பாவத்தைத் தாம் மேற்போட்டுக்கொண்டு இரட்சிப்பை யருளுவோம் என்று வாக்குரைக்கிருர். கிறிஸ்துமார்க்கத்தில்மாத்திரம் தேவ நீதியையும் அவர் பரிசுத்தத்தையும் அறிந்து அவர் அனுப்பின கிறிஸ்துவைச் சிநேகித்து அவர் உபதேசத்தையும் கட்டளைகளையும் கைக்கொண்டு நடக்கிறவர்களுக்குப் பாவமன்னிப்பின் வாக்குத்தத்தம் உண்டாயிருக்கிறது.

XI. VEDIC SCIENCE ABSURD AND INCREDIBLE.
வேதசாஸ்திரம் புத்திக்கும் பக்திக்கும் விரோதமானது.

உபநிஷதங்களிலும் சூத்திரங்களிலும் அடங்கியிருக்கிற சாஸ்திரமானது தெய்வத்துணையால் இயற்றப்பட்ட வேதத்தின் தன்மைக்கு பொருந்தாததாயிருக்கின்றது. இங்கு 'வேதம்' என்பது கடவுளையும் அவரை மனுமக்கள் வழிபடும் மார்க்கம் முதலியவற்றையும் விளக்கும் நூலையும், 'சாஸ்திரம்' என்பது பிரபஞ்சத்திலுள்ள பல பொருள்களின் தன்மை, கூறுபாடு, பிரமாணம் முதலியவற்றை விளக்கும் பூகோளம், ககோளம், அங்கநூல், தாபரசங்கம சாஸ்திரம்போன்ற பல நூல்களையும் குறித்ததாக உபயோகிக்கின்றோம். ஓர்வேளை "எங்கள் சாஸ்திரம் எங்கள் வேதமன்று" என்று சிலர் சொன்னாலும் சொல்வர். ஹிந்துமத வேதத்திலோ இவ்விரண்டையும் பிரிப்பது கூடாது. ஐரோப்பிய வித்வான்களுக்குள்ளும் இவ்விதக் கோட்பாடுண்டு. "சாஸ்திரம்" முழுக்கல்வியும், "வேதம்" அக்கல்வியின் ஓர் பாகமுமாயிருக்கின்றது. "அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும் கல்வி" என்பது யாவர்க்கும் தெரிந்த ஸ்லோகமே. இவ்விரண்டிற்கும் ஒரேவிதமான பிரமாணங்கள் உண்டு; வேதம் பொய்யாயின் சாஸ்திரம் மெய்யாகாது; சாஸ்திரம் பொய்யாயின் வேதம் மெய்யாகாது. இரண்டும் ஒன்றே. ஆதலால் உபநிஷதக் கர்த்தாக்கள் இரண்டையும் கலந்தவாறாய் இயற்றியிருக்கிறார்கள். அதை வாசிப்பவன், "இது வேதம், இது சாஸ்திரம்" என்று பிரத்தியேகப்படுத்த முடியாது. "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்" என்பதற் கிசைய கல்வியறிவும் வேத அறிவும் வேறல்ல. இதுநிற்க,—

(i) வேதங்களில் அடங்கியிருக்கும் சாஸ்திர விஷயங்களை ஆராயுமிடத்து, 'ஜீரணம்' என்னும் தேகத்தொழிலைக்குறித்து வேதவியாஸர் சூத்திரங்களிலே சொல்வதை விசாரிப்போம். "தானியம்முதலிய பயிர்வகைகள் மாம்சமாகின்றன; (அவற்றின்) நுண்ணிய பதார்த்தங்கள் மனதைப் போஷிக்கின்றன; சலம் உதிரமாக மாறும்; (அதின்) நுண்ணிய கூறுகள் சுவாசத்தை உண்டாக்குகின்றன. எண்ணெய் முதலிய எரிவஸ்துக்கள் மூளையாய்விடுகின்றன; (அவற்றின்) தடித்த பாகங்

கள் எலும்பும் நுண்ணிய பாகங்கள் பாஷா சத்தியுமாக மாறி விடும்'' என்கிறார். இந்தத் தாட்டாந்தங்கள் சத்தியமோ அசத்தியமோ என்பதை நாம் அறியும்பொருட்டு, ஜீரணத்தொழிலை அங்கநூலின் உதவியைக்கொண்டு தங்கள் சொந்தக் கண்களால் கவனித்து விளக்கியிருக்கும் தற்கால வைத்திய நிபுணர்கள் சொல்வதைப் பார்ப்போம். மாமிசம், காய், கனியாதி சகல பதார்த்தங்களும் உதிரம் என்னும் ஒரே வஸ்துவாக மாறி, அந்த உதிரத்திலிருந்தே உடலின் பல கூறுகளும் உண்டாகின்றன. அவற்றிற்கெல்லாம் உதிரமே உணவாயிருக்கின்றது. எலும்புக்கு எலும்பு சாரத்தையும், தசைக்குத் தசையையும், தாதுக்குத் தாதுக்கருவியையும், தோலுக்குத் தோற்கூற்றையும், நாடிகள் நாளங்களுக்கு அவ்வக் கருவிகளையும் உண்டுபண்ணி, நேரத்துக்குநேரம் அவற்றவற்றில் உண்டாகும் குறைவுகளை நிறைவுசெய்துவருகிறது அவ்வுதிரமே என்கிறார்கள். இவ்வதிசயம் நடக்கிறவிதத்தை நாம் அறியோம்; இத்தொழிலையோ சாஸ்திரிகள் பிரதிதினமும் பார்த்துவருகிறார்கள். வியாஸர் உபதேசம் இதற்கு முற்றிலும் மாறாயிருக்கின்றது.

(ii) உபநிஷதத்திலுள்ள சாஸ்திரவிஷயங்களும் அவ்வாறே தற்கால சாஸ்திர சத்தியங்களுக்கு விரோதப்பட்டிருக்கின்றன. அண்டத்திலிருக்கும் பல லோகங்களைக்குறித்துப் பேசுகையில், பூமிக்கு அதிக சமீபமாயிருப்பது சூரியனும், அதற்கப்பால் சந்திரனும், அதற்கப்பால் மின்னலும், அதற்கப்பால் மழையும் உண்டென்று சொல்லியிருக்கிறது. இவை சுத்தத் தவறென்பதை ரூபிக்க அவசியமே இல்லை.

(iii) அன்றியும், மழை சந்திரனிடத்திலிருந்து புறப்பட்டு மறுபடியும் சந்திரனிடத்திற்கே திரும்பிவிடுகிறதென்றும, கிரஹணத்திலே சந்திரன் சூரியனுக்குள்ளே மறைந்துவிடுகிறதென்றும், சூரியன் நெருப்பிலிருந்தும், நெருப்பு காற்றிலிருந்தும், மின்னல் மழையிலிருந்தும் உண்டாகிறதென்றும் சொல்லியிருக்கிறது. இது தெய்வம் வெளிப்படுத்தின வானசாஸ்திரம்!

(iv) சந்திரனானது இயற்கையாய்த் தனக்குள்ளேயிருக்கிற ஒளியைக்கொண்டு பிரகாசிக்கிறதாக பாகவதமும் மற்றும் புராணங்களும் சொல்லுகின்றன. ஆனால் சந்திரனானது இயற்கையிலே ஒளியற்றதாயிருந்து சூரியனுடைய காந்தியினால்மட்டும் ஒளிபெற்றுக்கொண்டு பிரகாசிக்கிறதாயிருக்கிறது.

கடலின் அலைகளானவை ஒரு பெரிய ஆமையானது சுவாசம்விட்டு வாங்குவதினாலுண்டாகின்றனவென்று புராணங்கள் கூறுகின்றன. இக்காலத்திலுள்ள சாஸ்திரங்களினாலோ

வென்றால் அவைகள் சூரிய சந்திர சங்கேபத்திஞலுண்டா கிறதாகத் தெரியவருகிறது.

பர்வதங்கள் பூமியை நிசரமாக்குவதற்காக வைக்கப்பட்டிருப்பதாய் பாகவதமும் மற்றும் புராணங்களும் சொல்லுகின்றன. ஆனல் பூகோளசாஸ்திரத்திஞல் பர்வதங்கள் பூமியின் சமதளததின்மேலுள்ள சமனற்றமேடுகளாகவும் அலங்காரக் காட்சிகளாகவும், மேகங்களின் வருஷிப்புக்கென்றும் தேச சுவாத்திய மாறுதலுக்கென்றும் நதிகளின் உற்பத்திக்கென்றும் உண்டாயிருப்பதாகப் போதிக்கப்படுகிறது.

பூமியானது சேடனின் தலையின்மேல் பொருத்திருக்கிறதாக இந்துசாஸ்திரம் சொல்லுகிறது. ஆனல் அப்படிக்கில்லாமல் பூமியானது எதிர்முகமான இருவித சங்கேபத்தின் எதிர்த்தாக்கத்திஞல் நழுகிப்போக இடமில்லாமல் காக்கப்பட்டு அந்தரத்தில் தொங்கி நிற்கிறது.

பூகம்பமானது பூமிக்குள்ளிருக்கும் தீப்பற்றக்கூடிய பதார்த்தம் வெடிக்கிறதிஞ லுண்டாகிறதென்பது பிரத்தியட்சமாயிருக்க, இந்துசாஸ்திரமானது பூமியைச் சிரசில் தாங்கிக்கொண்டிருக்கிற சேடனின் சிரசின் அசைவிஞ லுண்டாகிறதென்று கூறுகிறது.

கிரகணங்களானவை பூமியானது தன் ஓட்டத்தில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் வரும்போது அல்லது சந்திரனனது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும்போது உண்டாகிற இருட்டாயிருக்க, இந்துசாஸ்திரமானது ராகுகேது என்னும் பாமபுகள் சந்திரனை விழுங்கிப்போட எத்தனிக்கிறதிஞ லுண்டாகிறதென்று சொல்லுவது நம்பத்தகாததாயிருக்கிறது.

(v) இப்பொழுது உபநிஷதத்தில் இரஸவாதம் என்னும் சாஸ்திரத்தைக்குறித்துச் சொல்லியிருப்பதைச் சற்றுப் பார்ப்போம். ஒவ்வொரு வஸ்துவும் பஞ்சபூதங்களிலிருந்து உண்டாகிறதென்று கூறியிருக்கிறது. இவ்வைந்திலே "ஆகாயம்" என்பது ஓர் வஸ்துவன்று; அது இல்பொருளைச் சேர்ந்தது. சேஷமான நான்கும் தனி வஸ்துக்கள் அல்ல; சேர்க்கைப் பொருள்கள்: ஆக்ஸிஜென், ஹைடிரொஜென், நைட்ரொஜென் முதலிய தனிப் பதார்த்தங்களாலானவை. அன்றியும் சொப்பனம், ஆத்மாவின் 'வேற்றுமை மூன்று' முதலியவற்றைக்குறித்து வேதங்கள் கூறும் விந்தையான காரியங்களை இவ்விடம் எடுத்துரைக்க அவசியமில்லை. இது ஹிந்துவேத சாஸ்திரத்தின் தன்மை. ஹிந்துமதாநுசாரிகள் வானசாஸ்திரம், ஜோஷியம்,

யாப்பிலக்கணம் முதலிய கலைகளைக் கற்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆத்ம ரட்சிப்படையவேண்டிய ஒருவன் பஞ்சவிலக்கணம் வாசிக்கவேண்டியது என்ன விபரீதம்! இதுகளை நாம் வாசித்துப்பார்க்கிறதிலே ஒரு தோஷமும் இல்லை. ஆனால் இவற்றை எழுதின ரிஷிகளுககுக் கடவுளே இந்தத் தப்பான விஷயங்களை ஓதினார் என்பது பழிப்புக்கிடமாயிருக்கின்றது. தற்கால சாஸ்திரிகள் தெய்வபோதனையினாலல்ல, தங்கள் ஐம்புல அறிவினாலும் அநுபோகத்தினாலுமே உலகபொருள்களை நன்காராய்ந்து அவற்றவற்றின் இயல்பைப் பிழையின்றித் தெளிவிக்கிறார்களே.

XII. WHY IS INDIA NOT PROGRESSIVE?
இந்தியா விர்த்தியடையாதிருக்கிறதேன்?

நூதனமானதொன்றை நோக்கும் விதத்தில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் பெரும்பேதமுண்டு. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் குறளுக்கிசைய அங்கிலேயர் யாதொரு விஷயம் புதிதாயிருந்தாலும் அதைப் பாராமல், அது உண்மையும், உபயோகமுமுள்ளதென்று கண்ட உடனே அதை ஆவலுடன் அங்கிகரித்துக்கொள்ளுகிறார்கள். ஹிந்துக்கள் அப்படிச் செய்கிறதில்லை. நூதனமான ஒன்றின் குணத்தையாவது அதினால் விளையும் சுகத்தையாவது அவர்கள் பாராமல், அது நூதனமாயிருக்கிற அவ்வொரு விஷயத்தின்பொருட்டே அதை விரோதிக்கிறார்கள். அங்கிலேயர் ஆசையாய் அங்கிகரித்துக்கொள்ளும் நவமான பழக்க ஒழுக்கங்களை ஹிந்துக்கள் முழுப்பகையாய் பகைத்துத் தள்ளிவிடுகிறார்கள். உதாரணமாக, சென்ற 500 வருஷகாலத்திலே இத்தேசத்தில் உண்டான சீர்திருத்தங்கள் யாவை? அங்கிலேயர் பலாத்காரமாய் உண்டுபண்ணிய சில மாறுதல்கள் தவிர வேறொரு மாறுதலையும் காணோம். சனங்கள் தாயாய் ஒரு விர்த்தியும் செய்துகொண்டதேயில்லை. சாஸ்திர சம்பிரதாயத்திலாவது, பற்பல கைத்தொழில்களிலாவது யாதொரு விர்த்தியும் காணோம். தொழிலாளிகளின் ஆயுதங்கள் எல்லாம் ஆதியிலிருந்தபடியே இப்பொழுதும் இருக்கின்றன. யாதொரு விர்த்தியுமில்லை. வைத்தியம், வித்தியா

பயிற்சி, கைத்தொழில் முதலிய ஒவ்வொன்றிலும் ஹிந்துக்கள் தங்களுக்குத் தெரிந்த முறைகளைப் பத்திரமாய்ப் பரிபாலனம் பண்ணி, தெரியாத அந்நிய முறைகளைக் கேவலம் அலட்சியம் பண்ணி வருகிறார்கள். இது அங்கிலேயர் நடத்தைக்குச் சுத்த விரோதமாயிருக்கிறது. 500 வருஷத்திற்கு முன்னே இங்கிலாந்தின் நாகரிகத்தைக் கண்டவன் அதின் தற்கால விர்த்தியையும் காணக்கூடுமாயின், அவன் அத்தேசத்தை இங்கிலாந்துதான் என்று ஒப்புக்கொள்வது அசாத்தியமாயிருக்கும்; இந்தக் காலத்திலே அதற்குண்டாயிருக்கும் அபிவிர்த்தி அத்தனை பிரமிக்கத்தக்கதாயிருக்கிறது. நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நீராவியும் மின்சாரமும், அவை இயற்றும் அனந்தமான அற்புதச் செய்கைகளும் அங்கிலேயரின் வழக்கப் பழக்கங்களையும் நடை உடை பாவனைகளையும் முற்றிலும் மாற்றிவிட்டன. ஒருவன் அங்கிலேயரின் காரியா காரியங்களைப் பார்த்து, இது 500 வருஷத்துப் பழக்கம், இது 500 வருஷத்து உடை என்று சொல்லத் துணியான்.

விர்த்தியை அபேட்சிக்கும் அங்கிலேயருக்கும், அதை உபேட்சிக்கும் ஹிந்துக்களுக்கும் இதுவே வித்தியாசம். இது சாதி இயல்பு, சன லட்சணம் என்று சிலர் சொல்வார்கள். இதின் காரணம் இதுவல்ல. ஹிந்துமத சாஸ்திரங்களும் ஹிந்துமதக் கொள்கைகளுமே இதின் காரணம். பொய்யான உபதேசங்களை அவர்கள் மெய்யாக எண்ணி வருகிறார்கள். இதுகளை அவர்கள் விட்டுவிட்டு உண்மையைச் சாதித்து வருவார்களாகில், அவர்களும் அங்கிலேயர் போலவே விர்த்தி அடையவேண்டுமென்ற ஆவலுள்ளவர்களாவார்கள். நவமான யாதொன்றும் இத்தேசத்தில் வந்து நுழையாவண்ணம் இந்தியாவின் மதமே பெருந்தடையாயிருக்கிறது. சர்வமும் விதிப்பயன் என்னும் கோட்பாடும், சாமானிய புத்திக்கு விரோதமான மதோபதேசமும் இத்தேசத்தார் காலுக்கு வச்சிர விலங்கிட்டுச் சித்திரப் பாவைபோல் சீர்த்திருத்தமின்றிக் கிடக்கச் செய்கின்றன. நஞ்சுண்டு விறைத்துக் கிடக்கும் புருஷனைப்போல, இத்தேசசமும் சதுர்மறைச் சாஸ்திரம் என்னும் விஷத்தைக் குடித்து விர்த்தி என்னும் உயிரற்றுத் தவித்துக்கொண்டிருக்கிறது.

இத்தேசம் எப்பொழுதும் இக்கேவல ஸ்திதியில் இருந்ததில்லை. ஆதியிலே ஹிந்துமதம் கிஞ்சித்து சுத்தமாயிருந்தகாலத்தில் ஹிந்துக்களும் விழிப்புள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் அதிலே வரவரச் சத்தியம் குறைந்து அசத்தியம் பெருகவே ஹிந்துக்களும் மதிமயங்கி விர்த்தி விஷயமான ஒவ்வொன்றை

யும் வெறுக்கத் தொடங்கினார்கள். தற்காலம் இத்தேசத்திலே விர்த்தியைப்பற்றிய ஆவல் இஞ்சித்துண்டாயிருக்கிறது வாஸ்தவந்தான். ஆனால் இந்த ஆவலானது ஹிந்துக்களிடத்தில் சுயேச்சையாய்ப் பிறந்ததல்ல. பூர்வக் கொள்கைகளை நண்டுப் பிடியாய்ப் பிடித்திருக்கிறவர்களிடத்திலல்ல, அங்கிலேய கல்விப் பயிற்சியினாலே அந்தக் கொள்கைகளைப் பெரும்பாலும் தள்ளிவிட்டு நவமான கொள்கைகளை அநுசரித்திருக்கிறவர்களிடத்தில்தான் இந்த ஆவல் ஒருவாறு விளங்கக் காண்கிறோம். சில தேசாபிமானிகள் சாதிக்கும் பிரகாரம் சதுர் வேதோபதேசத்தை நிலைநிறுத்துவதினால் இத்தேசம் விர்த்தி அடையும் என்பது சுத்த பிசகு. இந்தச் சதுர்வேதமும், அதிலிருந்து உண்டான சாஸ்திர புராணங்களுமே இந்தியாவை இந்தக் கேவல ஸ்திதியில் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

"சாத்திரத்தைச் சுட்டெச் சதுர்மறையைப் பொய்யாக்கி
சூத்திரத்தைக் கண்டு சுகம்பெறுவ தெக்காலம்."

என்று ஓர் ஹிந்துப் புலவன் பிரலாபித்தபடியே, வேதசாஸ்திரங்களை விட்டுவிடுவதே உத்தமம்.

நாம் இப்பொழுது இரண்டுவிதமான சனத்தின் நடபடிக்கைகளைக் கவனித்தோம். வேதபுராணங்களைப் பின்பற்றி வரும் ஒரு சனம் எவ்வித விர்த்தியையும் எதிர்த்து நிற்கின்றது. பைபில் என்னும் வேதத்தைக் கையாடி வரும் சனமோ ஒழியாத விர்த்தியுள்ளதும் லோகோபகாரமான எதையும் தடையின்றி உபயோகிப்பதும், வித்தையிலும், கல்வியிலும் சகலவித நாகரீகத்திலும் மேன்மைபெற்றதுமாயிருக்கிறது. அங்கிலேயருக்கு விர்த்தியை உண்டுபண்ணுவது பைபில் என்னும் வேதமே. இதுவே ஹிந்துக்களையும் விர்த்திப்பிரியராக்கும். ஹிந்துக்கள் பைபிலை அங்கிகரித்துக் கிறிஸ்தவர்கள் ஆகும் வரையில் அவர்களுக்குள் விசேஷமான யாதொரு விர்த்தியும் பிறக்கமாட்டாது என்பது திண்ணம்.

S. P. C. K. Press, Vepery, Madras. 1891.

HINDUISM REFUTED.

ஹிந்துமத கண்டனம்.

BY THE

Rev. HENRY RICE,

MADRAS:

FIRST EDITION, 5,000 COPIES.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

1891.